
வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria றியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 30.01.2023 திங்கட்கிழமை | இதழ் : 52 | பக்கங்கள் : 16

# கச்சதீவு ஆலய திருவிழாவுக்கு நன்கொடை கேட்கின்றது அரசு

## பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக உதவி வழங்குமாறு பகிரங்க கோரிக்கை

கொழும்பு, ஜனவரி 30

**கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாவிற்கு நன்கொடையாளர்கள் ஆதரவு அளிக்குமாறு இலங்கை அரசு வேண்டுகோள் விடுத்துள்ளதாக ஐ.ஏ.என்.எஸ் செய்திச்சேவை தெரிவித்துள்ளது.**

1974 ஆம் ஆண்டு கச்சத்தீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டதன் பின்னர் இந்தியாவில் இருந்து வரும் மக்கள் தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த நிலையில் எதிர்வரும் மார்ச் 3 மற்றும் 4 ஆகிய திகதிகளில் நடைபெறும் தேவாலய

15



## சாவகச்சேரி விபத்தில் இளம் குடும்பஸ்தர் பலி!

யாழ்ப்பாணம், ஜன.30

சாவகச்சேரி பிரதேசத்தில் ஏ9 வீதியை கடக்க முயன்ற வர்த்தகர், பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சங்கத்தானை பகுதியில் இந்த விபத்து, நேற்று மாலை இடம்பெற்றது.

சங்கத்தானையிலுள்ள நகைக் கடை உரிமையாளரான பிரதாப் (வயது-38) என்பவரே உயிரிழந்

15

## ‘13’ ஐ நடைமுறைப்படுத்த மகாசங்கம் அனுமதிக்காது!

### தம்மரத்ன தேரர் திட்டவட்டம்

கொழும்பு, ஜன. 30

13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த மகா சங்கம் ஒருபோதும் இடமளிக்காது என்று களனிப் பல்கலைக்கழகத்தின் மூத்த விரிவுரையாளரும் பேராசிரியருமான வணக்கத்துக்குரிய பூஜ்ய இந்துரகரே தம்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

15

## தமிழ் கூட்டமைப்பின் உடைவுக்கு தமிழரசின் ஒரு குழுவே காரணம்

### கஜதீபன் பகிரங்க குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்த மைக்கு, ரணிலின் பின்னணியில் இயங்கும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஒரு குழுதான் முழு காரணம் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கஜதீபன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் மல்லாகத்தில் இடம்பெற்ற வேட்பாளர் சந்திப்பின் போது உரையாற்றுகையிலையே அவர்

15

## குற்றப்பத்திரத்தை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருக்கின்றேன்!

### காஞ்சனவுக்கு ஜனக ரத்னாயக்க பதில்

கொழும்பு, ஜன. 30

அமைச்சர் காஞ்சன விஜேசேகரவினால் தயாரிக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றப்பத்திரிகையை எதிர்கொள்ள ஆவலுடன் காத்திருப்பதாக பொதுப்பயன்பாடு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்க பதிலளித்துள்ளார்.

ஜனக ரத்னாயக்கவை குறித்த ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதற்கு நடவடிக்கை

15

## வஜிர, துமிந்தவுக்கும் அமைச்சுப் பதவிகள்!

கொழும்பு, ஜன. 30

ஐக்கிய தேசியக் கட்சியின் வஜிர அபேவர்தன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் துமிந்த திசநாயக்க ஆகியோருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன என்று கொழும்பு செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று ஞாயிற்றுக் கிழமை வெளியான அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதா

15

## வலி. வடக்கில் ஒரு பகுதி காணிகள் சுதந்திரதினத்துக்கு முன் விடுவிப்பு

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 30

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பொதுமக்களின் காணிகளில் ஒரு பகுதி காணிகள் எதிர்வரும் மூன்றாம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் கையளிப்பதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சி

15

## தமிழ் அரசியல் கைதிகள் மூவர் சுதந்திர தினத்தன்று விடுதலை!

கொழும்பு, ஜன. 30

தமிழ் அரசியல் கைதிகள் மூவர், எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி விடுதலை செய்யப்படவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் முன்னாள் அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரனின் கொலைக் குற்றவாளியை விடுவிக்கும் நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகேஸ்வரன், 2008 ஜனவரி முதலாம் திகதியன்று கொழும்பில் சுட்

15

## நீதி அமைச்சர் கதை அளப்பதை நிறுத்தி அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஜன. 30

“வெளிநாட்டில் இருந்து வந்த பிரதிநிதி ஒருவருக்கு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ நன்றாக கதை அளந்து இருக்கிறார். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு தடையாக ஒரு சில தமிழ் அரசியல்வாதிகள் இருப்பதாகவும் அவர்களுடைய ஒத்துழைப்பு இல்லாமையால் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியாமல் இருப்பதாக கூறியிருப்பது விஷமத்தனமானதும் சிறுபிள்ளைத்தனமானதும்.”

-இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் நீதி அமைச்சராக இருக்கும் ஒருவர் அரசியல் கைதிகள் விடுதலை பற்றிய நீதிப்பொறிமுறைகளை அறியாதவராக இருக்கின்றாரா என்ற கேள்வி எழுகிறது. ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில்

15

## பொதுப்பயன்பாடு ஆணைக்குழு தலைவரை பதவி நீக்க தீர்மானம்

### அரச தரப்பு எம்.பிக்கள் ஒப்புதல்

கொழும்பு, ஜன. 30

பொதுப்பயன்பாடு ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து ஜனக ரத்னநாயக்கவை நீக்குவதற்கு அரசாங்கத்தின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒப்புதல் வழங்கியுள்ளனர்.

மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், பொதுப்பயன்பாடு ஆணைக்

15

உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023
தமிழ் தேசிய கூட்டமைப்பு
தமிழின ஆன்மாவின் ஒருமித்த சின்னம்!
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி
கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

## இப்படியும் நடக்கிறது…!

கடந்த ஆண்டு நவம்பர் பத்தாம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கின் பிரச்சினைகளுக்கு எதிர்வரும் சுதந்திர தினத்திற்கு முன்னதாக தீர்வு காணப்போவதாக அறிவித்தார்.

அப்போது அவர், வடக்கின் பிரச்னை என்றே அழுத்தம் திருத்தமாகக் கூறியதுடன், அவை என்ன என்ன பிரச்னைகள் என்றும் கோடிட்டுக்காட்டினார்.

கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு, காணாமல்போனோர் விவகாரத்திற்கு தீர்வு காணுதல் என்று பிரச்னைகளையும் பட்டியலிட்டார்.

'வடக்குக்காக நாம் பல அபிவிருத்தி திட்டங்களைக் கொண்டுள்ளோம். அதற்கான மதிப்பீடுகளும் எம்மிடமுள்ளன. வடக்கில் புதுப்பித்தக்க சக்தி மற்றும் பசுமை ஐதரசன் பயன்பாடு தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். திருகோணமலையில் அபிவிருத்திச் செயல்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையும் மேம்படுத்தப்பட்டு வருகின்றது. இவை யாவும் இலங்கையர்களாகிய நமக்காகவே முன்னெடுக்கப்படுகின்றன. 75ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்தின் போது இந்தப் பிரச்னைகளை தீர்க்கவேண்டும்.'

இப்படித்தான் ஜனாதிபதி பேசினார்.

உடனேயே தமிழர் தரப்பில் இருந்து நம்பிக்கை கீற்றுக்கள் வெளிவந்தன. ஜனாதிபதி அழைத்தால் என்ன பேசுவது என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் கூடி ஆராய்ந்தன.

அவர்கள் ஜனாதிபதி செய்ய வேண்டும் என்று சொன்ன விடயங்களையே, தமது முதற்கட்ட கோரிக்கைகளாக முன்வைத்ததோடு, கூடவே அரசியலமைப்பு சட்டங்களில் தற்போதுள்ள சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அதன் பின்னர் இனப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுக்களை தொடரலாம் என்றும் தீர்மானித்தன.

டிசெம்பர் பதின்மூன்றாம் திகதி நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தமிழ்க் கட்சிகள் தமது கோரிக்கைகளை முன்வைத்ததுடன் அவற்றை நிறைவேற்ற காலக்கெடுவும் விதித்தன.

பின்னர் இருபத்தியோராம் திகதி சம்பந்தனும் சுமந்திரனும் ஜனாதிபதியைச் சந்தித்து கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு என்று பேச்சு நடத்தி முடிவுகளையும் வெளியிட்டிருந்தனர்.

இடையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கொழும்பு வந்து சென்ற பின்னர், இந்த பதின்மூன்றை அமுல்படுத்துகின்ற விடயத்தை ஜனாதிபதி திடீரென்று கையில் எடுத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

ஏன் இந்த திடீர் மாற்றம் என்பது தெரியவில்லை. ஆனால், அதன் பின்னணியை அறிய அரசியல் ஆய்வு தேவையில்லை.

திடீரென்று கடந்த வியாழனன்று அனைத்துக் கட்சிகளையும் பேச்சுக்கு அழைத்த ஜனாதிபதி, காணி, பொலிஸ் அதிகாரம் உட்பட பதின்மூன்றில் உள்ள அனைத்து அதிகாரங்களையும் வழங்கப்போவதாக அறிவித்து பலரையும் புருவத்தை உயர்த்த வைத்திருக்கின்றது.

அன்றைய கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பான்மையான ஆளும் கட்சித் தலைவர்கள் காணி, பொலிஸ் அதிகாரத்தை வழங்குவதற்கு கடும் கண்டனத்தை தெரிவித்தபோதிலும், ஜனாதிபதி கடும் தொனியில் அரசியலமைப்பு சட்டத்தில் இருக்கின்ற விடயங்களை நிறைவேற்றவேண்டியது ஒரு நிறைவேற்று அதிகரமுள்ள ஜனாதிபதியின் கடமை என்றும், வேண்டுமானால் பதின்மூன்றை ரத்துச் செய்யும் பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றி அதனை இல்லாமல் செய்யுங்கள், ஆனால் அது சட்டத்தில் இருக்கும்போது அதனை நிறைவேற்ற தான் தயங்கப்போவதில்லை என்று கடும் தொனியில் தெரிவித்திருக்கிறார்.

கொழும்பு வந்து சென்ற இந்திய வெளிவிவகார அமைச்சர், மாகாண சபைகளுக்கான தேர்தல்களை உடன் நடத்தவேண்டும் என்றும் பகிரங்கமாகவே கூறிச்சென்றிருந்தார். இந்த நிலையில் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தவேண்டும் என்றால் பாராளுமன்றத்தில் ஒரு பிரேரணை மூலம் பழைய தேர்தல் முறையில் தேர்தலை நடத்துவதற்கான அனுமதியை பெறவேண்டும். அதற்கான நகல் வரைவு தன்னிடம் தயாராகவே இருக்கின்றது என்று தமிழ் அரசின் எம்.பி. சுமந்திரன் பல தடவைகள் தெரிவித்திருக்கிறார்.

எதிர்வரும் பெப்ரவரி எட்டாம் திகதி பாராளுமன்றம் கூடும்போது அதற்கான பிரேரணையை சமர்ப்பித்து தேர்தலுக்கான முஸ்தீபை தமிழ்த் தரப்பே தொடக்கி வைக்கவேண்டும். ஜனாதிபதி பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துகின்ற வேலையை பார்க்கட்டும். நாம் தேர்தலுக்கான வேலையை தொடங்குவோம்.!

- ஊர்க்குருவி

## வீட்டிலுள்ளவர்களை அச்சுறுத்தி கொள்ளையடித்த கும்பல் கைது!



யாழ்ப்பாணம், ஜன. 30

வீடொன்றுக்குள் வாள்களுடன் புகுந்து வீட்டிலுள்ளவர்களை அச்சுறுத்தி நகைகளைக் கொள்ளையடித்து தப்பித்த கும்பலைச் சேர்ந்த நால்வர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து கொள்ளையிட்ட நகைகள், வாள்கள் என்பன கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் கோப்பாய், மூன்று கோயிலுக்கு அண்மையாக கடந்த ஜனவரி 3ஆம் திகதி அதிகாலை 1.30 மணிக்கு கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

5 பேர் கொண்ட கும்பல் வாள்களுடன் வீட்டுக்குள் புகுந்து அங்குள்ளவர்களை இருத்தி வைத்து மூன்று பெண்களை அடித்துத் துன்புறுத்தி-வயோதிபர்களை அச்சுறுத்திவிட்டு 12 தங்கப் பவுண் நகைகளை கொள்ளையிட்டு தப்பியது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அது தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளில் சுன்னாகம், இணுவில் பகுதிகளைச் சேர்ந்த 25, 26 வயதுகளையுடைய நால்வர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் கொள்ளையிட்ட நகைகளில் ஒரு பகுதி, அடகு வைக்கப்பட்ட நிலையில் பற்றுச்சீட்டுகள் மற்றும் வாள்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, கடந்த ஜனவரி 15ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று வீதியில் சென்ற ஆசிரியை தாக்கிவிட்டு நகையை கொள்ளையிட்ட சம்பவத்துடனும் இந்த சந்தேக நபர்களுக்கு தொடர்புள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## பிளாஸ்டர்களுடன் வருமாறு கோரும் வைத்தியசாலைகள்

கொழும்பு, ஜன. 30

காயங்களுக்கு மருந்து கட்ட வரும் நோயாளிகள் பிளாஸ்டர்கள் மற்றும் மருந்துகளை கொண்டு வருமாறு அரச வைத்தியசாலைகள் அறிவுறுத்தியுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன. வைத்தியசாலைகளில் அதற்கான அறிவிப்பு வெளிநோயாளர் பிரிவில் ஒட்டப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் பிளாஸ்டர்கள் மற்றும் மருந்துகள் இல்லாத காரணத்தினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (அ)

## இந்திய படைப் பிரதானியுடன் மிலிந்த மொறகொட சந்திப்பு



கொழும்பு, ஜன. 30

இந்திய பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் அனில் சௌஹானை இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட புதுடில்லியில் உள்ள பாதுகாப்பு அமைச்சில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இரு நாடுகளின் ஆயுதப்படைகளுக்கு இடையே தற்போதுள்ள பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் பிராந்தியத்தில் பாதுகாப்பு நலன்களைப் பகிர்ந்து கொள்வது குறித்து சுமூகமான கலந்துரையாடல் நடைபெற்றது.

சிறிலங்காவின் ஆயுதப்படை வீரர்களுக்கு பல ஆண்டுகளாக உலகத்தரம் வாய்ந்த தொழில்முறை பயிற்சிகளை வழங்கிய இந்திய ஆயுதப்படைகளுக்கு தனது நன்றியை மிலிந்த மொறகொட தெரிவித்தார். தற்போதுள்ள பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் விரிவாக்குதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் குறித்தும் அனில் சௌஹானுடன் கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின்போது மிலிந்த மொறகொடவுடன் புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் அமைச்சர் ஆலோசகர் (பாதுகாப்பு) கொமடோர் ரொஹான் ஜோசப்பும் பங்கேற்றார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
30.01.2023 திங்கட்கிழமை
பிலவ வருடம், தை 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# சுதந்திர தின எதிர்ப்பு?

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. மறுபுறும், அதனை எதிர்ப்பதற்கான ஏற்பாடுகள் தமிழ் சூழலில் இடம்பெறுகின்றன. இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழர்கள் விரும்பிக் கொண்டாடும் சூழல் இல்லை. இலங்கை சுதந்திமடைந்ததாகச் சொல்லப்படும் காலத்திலிருந்து இதுதான் நிலைமை. ஒவ்வொரு சுதந்திர தினத்தின்போதும், தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் சுதந்திர தினத்திற்கு எதிராக, அடையாள எதிர்ப்பு நடவடிக்கைகளை செய்வது வருகின்றனர்.

ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்தில் அப்போதிருந்த சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுதந்திர தினங்களில் பங்குகொண்டிருந்தது. சம்பந்தனும் சுமந்திரனும் எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் சுதந்திர தின கொண்டாட்டங்களில் பங்குகொண்டிருந்தனர். ஆனால் இன்றோ, ரணில் தலைமையிலான சுதந்திர தினத்தை எதிர்த்து போராட்டங்களை நடத்தவுள்ளதாக தமிழரசுக் கட்சி அறிவித்திருக்கின்றது. அன்றைய ரணில் தலைமையிலான சுதந்திர தினத்தை ஆதரித்த தமிழரசு கட்சி, இன்றைய ரணிலின் சுதந்திர தினத்தை எதிர்க்கப்போவதாக கூறுகின்றது.

2015இல் ஆட்சி மாற்றத்திற்கான முயற்சிகள் தீவிரமாக இருந்த போது, கூட்டமைப்பின் சார்பில் சம்பந்தனும் சுமந்திரனுமே விடயங்களைக் கையாண்டிருந்தனர். ரணில், சந்திரிகா ஆகியோர் மீது அதீத நம்பிக்கையை சம்பந்தன் வெளிப்படுத்தியிருந்தார். ஒரு கட்டத்தில், இப்போதும் கூட, எங்களை நம்புகின்றீர்களா மிஸ்டர் சம்பந்தனென்று சந்திரிகா குமாரதுங்கவே, கேட்குமளவிற்கு, சம்பந்தனும் சுமந்திரனும் சிங்கள ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்தனர். பின்னர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக, மைத்திரி பால சிறிசேன செயற்பட்ட போது, ரணில் விக்கிரமசிங்கவின் பக்கமாகவே சம்பந்தனும் சுமந்திரனும் நின்றனர். இந்தக் காலத்தில் சுதந்திர தினத்தை எதிர்த்து ஒரு நிகழ்வைக்கூட தமிழரசுக் கட்சியினர் முன்னெடுக்கவில்லை. ஆனால் இப்போது அதனை எதிர்க்கப் போவதாக கூறுகின்றனர்.

சுதந்திர தினத்தை எதிர்பதாயின் அது கொள்கைசார்ந்த நிலைப்பாடாக இருக்கவேண்டும். சிங்கள ஆளும் தரப்போடு தேனிலவில் இருக்கும்போது, அதனை ஆதரிப்பதும், பின்னர் ஆளும் தரப்போடு முரண்பட்டுக் கொண்டதும் சுதந்திர தினத்தை எதிப்பதாகவும் இருக்கக் கூடாது. ஏனெனில் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னையை தீர்ப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் எவையுமே இதுவரையில் வெற்றியளிக்கவில்லை. அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதைக் கூட தென்னிலங்கை சிங்கள கட்சிகள் எதிர்த்து வருகின்றன.

இந்த பின்புலத்தில் நோக்கினால் இலங்கையின் சுதந்திர தினமானது, பெரும்பான்மை சிங்களவர்களுக்கானதொரு விடயமாகவே இருக்கின்றது. தமிழ் மக்கள் தங்களை இலங்கையர்களாக இதுவரையில் கருதவில்லை. தமிழ் மக்கள், அவ்வாறு உணரக் கூடியதொரு அரசியல் சூழலும் இதுவரையில் உருவாகவில்லை. இதுவரையில் இலங்கைத் தீவை மாறி, மாறி ஆட்சி செய்த சிங்கள ஆட்சியாளர்கள், தமிழ் மக்களை சம பிரஜைகளாக உள்வாங்கக் கூடியவாறான அரசியல் ஏற்பாடுகளை மேற்கொள்ளவில்லை.

தமிழ் மக்களின் சமத்துவத்திற்கான கோரிக்கைகள் அனைத்தையுமே எதிர்த்தே வந்திருக்கின்றனர். இந்த நிலையில் சுதந்திர தின எதிர்ப்பை எவருமே தவறென்று கூறமுடியாது, ஆனால், அந்த எதிர்பை தங்களின் தேர்தல் அரசியல் நோக்கில் கட்சிகள் கையாளக்கூடாது. தமிழ் தேசிய கட்சிகள் ஆகக் குறைந்தளவிலாவது மக்களுக்கு பொறுப்புள்ளவர்களாக இருக்க நடந்துகொள்ள வேண்டும். ஒரு முறை சுதந்திர தினத்தை கொண்டாடுங்களென்று கூறுவதும், பின்னர் எதிர்க்குமாறு கூறுவதற்கு மக்கள் ஆட்டு மந்தைகளல்ல.

# ரணிலை மிரட்டுகிறார் அனுரகுமார!

## நடவடிக்கை எடுக்குமாறு முறைப்பாடு

*கொழும்பு, ஜன. 30*

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசநாயக்க மிரட்டி வருகிறார் என தேர்தல் ஆணைக்குழுவிடம் தேசப்பற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி முறைப்பாடு செய்துள்ளது.*

*இது தொடர்பாக நேற்று ஞாயிற்றுக் கிழமை வெளியான கொழும்பு ஊடகம் ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:*

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அச்சுறுத்துகின்ற வகையில் கருத்துக்களை ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசநாயக்க ஊடகங்களில் வெளியிட்டு வருவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் தேசப்பற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி முறையிட்டுள்ளது.*

*ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய மாலைதீவுக்குக்கூட தப்பிச் செல்ல முடிந்தது. ஆனால், ஜனாதிபதி ரணிலால் அவ்வாறு கூட தப்பியோட முடியாது என்று அனுரகுமார திசநாயக்க தெரிவித்திருந்தார். ஊடகங்கள் வாயிலாக இவ்வாறு கருத்துக்களை வெளியிட்டு வருவதன் மூலம் இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் மிரட்டப்படுகின்றார் என்று தேசப்பற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.*

*தேர்தல் ஆணைக்குழுவில் முறையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தேசப்பற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் சுகத் ஹேவா பத்திரன, அனுரகுமார திசநாயக்க மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)*

# சுதந்திரதின கொண்டாட்டதில் 3,250 விருந்தினர்கள் பங்கேற்பர்

## ரணிலின் உரை இல்லை

*கொழும்பு, ஜன. 30*

*எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள 75 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வை மிகக் குறைந்த செலவில் சிறப்பாக நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக சிங்கள நாளேட்டின் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.*

*ஐந்து சார்க் நாடுகளின் 5 வெளியுறவுத் துறை அமைச்சர்கள் உள்ளிட்ட உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து 3,250 விருந்தினர்கள் சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.*

*விழாவுக்கான விருந்தினர்கள் காலை 7.28 மணிக்கு வந்து அமரவும், பொதுமக்கள் காலை 7.15 மணிக்கு முன்னதாக விழாவைக் காணவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைவரையும் டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவின் சிலைக்கு முன்பாக வருகை தருமாறு ஏற்பாட்டுக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.*

*பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நிகழ்வினை ஒழுங்கமைத்து வருகின்றது. பிரதமர் தினேஷ் குணவர்தனவும் அவரது பாரியாரும் காலை 8.13 மணிக்கும், அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது பாரியாரும் காலை 8.15 மணிக்கு வருகை தரவுள்ளனர்.*

*இரத்மலானை ஆனந்தா வித்தியாலயம், கொழும்பு 02 இல் உள்ள பாதுகாப்பு சேவைகள் கல்லூரி, கொழும்பு 08 இல் உள்ள தேசிய கீதத்தை பாடுவதற்காக டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரி, கொழும்பு 07 இல் உள்ள பௌத்த மகளிர் கல்லூரி, கொழும்பு 07 இல் உள்ள மியூசியஸ் கல்லூரி, கொழும்பு 04 இல் உள்ள முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு 07 இல் உள்ள றோயல் கல்லூரி, கொழும்பு 04 இல் உள்ள இராமநாதன் இந்துக் கல்லூரி, கொழும்பு 10 இல் உள்ள சாஹிரா கல்லூரி, வத்தளை புனித அந்தோனியார் தேசிய பாடசாலை, கொழும்பு 07 இல் உள்ள புனித பிரிட்ஜெட்ஸ் கொன்வென்ட், கொழும்பு 04 இல் உள்ள இந்து விதுஹல பாடசாலைகளைச் சேர்ந்த 105 மாணவர்கள் சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.*

*சிறிலங்கா இராணுவத்தின் 3,284 பேரும் மற்றும் 179 கவச வாகனங்கள், கடற்படையின் 867 பேரும் மற்றும் 52 கவச வாகனங்கள், வான்படையின் 695 பேரும் மற்றும் கவச வாகனங்கள் 109, சிறிலங்கா காவல்துறையின் 336 பேர், காவல்துறை சிறப்பு அதிரடிப் படையின் 220 பேர், 437 குடிமைத் தற்காப்புப் படையினர், தேசிய கேடட் படை 546 பேர், ஓய்வுநிலை அதிகாரிகள், 6,385 மாற்றுத் திறனாளி அலுவலர்கள் மற்றும் 390 கவச வாகனங்கள் பங்கேற்கவுள்ளன.*

*சுதந்திர தின நிகழ்வு அன்று ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றப் போவதில்லை எனவும், அது 3 ஆம் திகதி இரவு அல்லது சுதந்திர தின நிகழ்வின் பின்னரே உரையாற்றவுள்ளதாகவும் அந்த சிங்கள நாளேட்டின் இணையத்தளத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)*

# அரச நிறுவனங்களில் ஒரு வாரம் தேசியக் கொடி ஏற்ற அரசு முடிவு

*கொழும்பு, ஜன. 30*


*75ஆவது சுதந்திர தின விழாவையொட்டி, ஒரு வார காலத்துக்கு அரசு நிறுவனங்கள் இயங்கும் அனைத்து கட்டிடங்களிலும் தேசியக் கொடியை ஏற்ற அரசு முடிவு செய்துள்ளது.*

*அதன்படி பெப்ப்ரவரி 4ஆம் திகதி 75ஆவது சுதந்திர தின விழாவை சிறப்புற கருதி முதலாம் திகதி முதல் 7ஆம் திகதி வரை தேசியக் கொடி ஏற்றப்படும்.*

*பொது நிர்வாகம் மற்றும் உள்துறை அமைச்சகம் இது தொடர்பான சுற்றறிக்கையையும் வெளியிட்டுள்ளது.*

*அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நிறுவனங்களின் தலைவர்களுக்கு உரிய சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு



ஜனவரி - 30 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - தை 16
நல்ல நேரம் : 06.30 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : நவமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
உங்கள் எண்ணம் இன்று நிறைவேறும். எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். திட்டமிட்ட ஒரு வேலை முடிவிற்கு வரும். மனம் மகிழக்கூடிய சம்பவம் நடைபெறும்.

**இடபம்**
செலவில் கவனம் தேவை. தவறான நபர்களின் நட்பினால் சில பிரச்னைகளை சந்திக்க நேரும். வரவை விட செலவு கூடும். குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்பு உண்டாகும்.

**மிதுனம்**
எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். தடைபட்டிருந்த செயல்கள் நடந்தேறும். வர வேண்டிய பணம் வரும்.

**கடகம்**
வியாபாரத்தை அபிவிருத்தி செய்வது குறித்து நண்பர்களிடம் பேசுவீர்கள். முயற்சிகளில் ஒன்று வெற்றியாகும். இழுபறியாக இருந்தவற்றில் மாற்றம் உண்டாகும்.

**சிம்மம்**
குடும்பப் பிரச்னையில் ஒரு முடிவிற்கு வர முடியாமல் தடுமாற்றம் அடைவீர்கள். பழைய பிரச்னை சங்கடப்படுத்தும். எந்தவொரு செயலிலும் ஈடுபாடு காட்ட முடியாமல் திணறுவீர்கள்.

**கன்னி**
எதிர்பார்த்த ஒன்று இழுபறியாகும். உறவுகள் வழியிலும் சங்கடங்களை சந்திப்பீர்கள். அலைச்சல் அதிகரித்து உடல் சோர்வடையும். எதிர்பார்த்த ஆதாயத்தில் தடை உண்டாகும்.

**துலாம்**
நண்பர்கள் ஆதரவால் எண்ணம் நிறைவேறும். நினைத்ததை நினைத்தபடி சாதிப்பீர்கள். உங்கள் அறிவாற்றல் வெளிப்படும். தடைபட்டிருந்த முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

**விருட்சிகம்**
புதிய உற்சாகம் தோன்றும். விலகிச் சென்ற உறவினர்கள் உங்களைத் தேடி வருவார்கள். மறைமுக எதிர்ப்புகளை சரி செய்வீர்கள். புதிய முயற்சியை தள்ளி வைப்பீர்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும்.

**தனுசு**
எதிர்பார்த்த நன்மையை உங்களால் காண முடியாமல் போகும். யோசித்து செயல்பட வேண்டிய நாள். உறவினரிடம் பிரச்னைகள் ஏற்பட்டு சங்கடம் அடைவீர்கள். முயற்சிகள் இழுபறியாகும்.

**மகரம்**
வேலையில் கவனம் தேவை. நேர்மையான செயல்களில் நன்மை உண்டாகும். திட்டமிட்ட செயல் நிறைவேறாமல் போகும். முயற்சியில் குழப்ப நிலை உண்டாகும்.

**கும்பம்**
நினைத்ததை சாதித்து முடிப்பீர்கள். குடும்பத்தினர் உங்கள் முயற்சிக்கு உதவியாக இருப்பார்கள். விரும்பியதை அடைவீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். உறவினர் வீடு தேடி வருவர்.

**மீனம்**
தொழிலில் எதிர்பார்த்த நன்மையை அடைய முடியாமல் போகும். வரவு செலவில் கவனம் தேவை. உற்சாகத்துடன் செயல்படுவீர்கள் என்றாலும் உங்கள் விருப்பம் நிறைவேறாமல் போகும். குடும்பத்தினரிடம் ஏற்பட்ட சங்கடம் விலகும்.

# இரட்டை இலை சின்னம் கேட்டு எடப்பாடி பழனிசாமி வழக்கு!

## உச்சநீதிமன்றில் இன்று விசாரணை

புதுடில்லி, ஜன. 30

அ.தி.மு.க.வில் தலைமை பதவியை கைப்பற்றுவது யார்? என்பது தொடர்பாக எடப்பாடி பழனிசாமிக்கும், ஓ.பன்னீர் செல்வத்துக்கும் இடையே ஏற்பட்ட மோதலை தொடர்ந்து கடந்த ஆண்டு ஜூலை 11 ஆம் திகதி அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி அ.தி.மு.க. இடைக்கால பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். ஓ.பன்னீர்செல்வம் கட்சியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து சென்னை ஐகோர்ட்டில் ஓ.பன்னீர்செல்வம் தொடர்ந்த வழக்கில் மாறுபட்ட தீர்ப்பு வெளியானது.

ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆதரவாகவும், 2 நீதிபதிகள் பின்னர் அளித்த தீர்ப்பு எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவாகவும் இருந்தன. இந்த தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றில் ஓ.பன்னீர்செல்வம் தொடர்ந்த வழக்கு விசாரணை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

இந்த நிலையில், ஈரோடு கிழக்கு தொகுதிக்கு இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து , இரு அணிகளும் தனித்தனியாக போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளன. இதனால் அதிமுகவின் இரட்டை இலை சின்னம் முடங்கும் சூழல் உருவாகியுள்ளது. இரு அணிகளும் வேட்பாளர்களை அறிவிக்கவில்லை. இருந்த போதிலும் இரு அணிகளும் தேர்தல் பணிக்குழுக்களை அமைத்து, தேர்தலுக்கான பணிகளை தொடங்கி விட்டன.



இந்த நிலையில் இரட்டை இலைச் சின்னத்தை தங்களுக்கு ஒதுக்க கோரி இடைக்கால தீர்ப்பு அளிக்க வேண்டும் என பழனிசாமி தரப்பு உச்ச நீதி மன்றில் முறையிட்டது. இந்த இரண்டு வழக்குகளும் இன்று திங்கட்கிழமை விசாரணைக்கு வருகிறது. இதனால் அரசியல் களத்தில் பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது. (அ)

# மருத்துவ அறிவியல் மாநாட்டை தொடங்கி வைத்தார் முதலமைச்சர்



சென்னை, ஜன. 30

சென்னையில் மருத்துவ அறிவியல் மாநாட்டை முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.

சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள முத்தமிழ் பேரவையில் ஈ.என்.ரி கூட்டமைப்பின் சார்பில் காது, மூக்கு, தொண்டை, தலை மற்றும் கழுத்து மருத்துவ அறிவியல் மாநாடு தமிழில் முதன்முறையாக நடைபெற உள்ளது. மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:-

மருத்துவ அறிவியல் மாநாடு தமிழில் நடைபெறுவது மகிழ்ச்சி அளிக்கிறது. முத்தமிழறிஞர் கலைஞர் தொடங்கி வைத்த முத்தமிழ்பேரவையில் தமிழில் மருத்துவ அறிவியல் மாநாடு நடைபெறுகிறது. முத்தமிழ் பேரவையில் நடைபெறும் இந்த மாநாட்டை பார்ப்பதற்கு கலைஞர் இருந்தால் மகிழ்ச்சியாக இருந்திருப்பார். மருத்துவ நூல்கள் தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. தமிழை, தமிழே என்று சொல்லும் போது கிடைக்கும் சுகம் எங்கும் கிடைப்பதில்லை. நிர்வாகத்தில் தமிழ், கோயில்களில் தமிழ், நீதிமன்றத்தில் தமிழ் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் தமிழ், இதனை வலியுறுத்தும் மற்றும் செயல்படுத்தும் அரசாக திமுக அரசு உள்ளது-என்றார். (அ)

## கடுமையான குளிர் எதிரொலி:

# பயணிகள் வரத்து குறைவால் ஆறு விமான சேவைகள் ரத்து

சென்னை, ஜன. 30

சென்னை மீனம்பாக்கம் உள்நாட்டு முனையத்தில் இருந்து ஹைதராபாத், கொல்கத்தா ஆகிய நகரங்களுக்கு செல்லவேண்டிய பயணிகள் விமான சேவைகள் திடீரென ரத்து செய்யப்பட்டன. அதேபோல் ஹைதராபாத், கொல்கத்தா ஆகிய நகரங்களில் இருந்து சென்னை வரவேண்டிய பயணிகள் விமானங்களும் ரத்து செய்யப்பட்டன. மேலும் இலங்கை தலைநகர் கொழும்பில் இருந்து அதிகாலை 2 மணிக்கு சென்னைக்கு வந்துவிட்டு மீண்டும் அதிகாலை 3:15 மணிக்கு புறப்பட்டு செல்ல வேண்டிய விமானங்களும் ரத்து செய்யப்பட்டு உள்ளன. நேற்று முன்தினம் இரவு மற்றும் நேற்று அதிகாலை ஹைதராபாத், கொல்கத்தா, இலங்கை வருகை, புறப்பாடு என மொத்தம் 6 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன.

இது பற்றி சென்னை விமான நிலைய அதிகாரிகளிடம் கேட்டபோது, இரவு நேரம் கடுமையான குளிர் நிலவுகிறது. எனவே இதன் எதிரொலியாக இரவு நேர விமானங்களிலும், அதிகாலை விமானங்களிலும் பயணிகள் வரத்து மிகவும் குறைவாகவே இருக்கிறது. இதனால் குறிப்பிட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டு அதில் பயணிக்க வேண்டிய பயணிகளுக்கு மாற்று ஏற்பாடு செய்யப்பட்டதாக தெரிவித்தனர். (அ)

# வன்முறைகளில் ஈடுபடுவோர் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்

## யாழ். சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 30

**யாழ்ப்பாணத்தில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிப்பவர்கள் மற்றும் வன்முறையுடன் தொடர்புடையவர்கள் தொடர்பில் முறைப்பாடளிக்கப்படும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என வட மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரட்ண தெரிவித்தார்.**

அதிக வட்டிக்கு பணம் வழங்கி அதனை மீள பெறுவதற்காக, பணம் பெற்றவர்களை அடித்துத் துன்புறுத்தும் காணொளிகள் சமூக வலைத் தளங்களில் பதிவாகியிருந்தன.

இந்த காணொளிகள் தொடர்பில், ஆராய்ந்து அதனுடன் சம்பந்தப்பட்ட பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட 5 பேரை பொலிஸார் கைது செய்ததுடன், அவர்கள் எதிர்வரும் 10ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதனை போன்று பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படையும் வகையில் செயற்படுபவர்களுக்கு எதிராக பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறினார்.

பொதுமக்கள் தங்களது முறைப்பாடுகளை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்துக்கு முறைப்பாடுகளை வழங்கினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரட்ண குறிப்பிட்டார். (அ)

# சீனாவிலிருந்து இறக்குமதியாகும் 10 ஆயிரம் ரயில் தண்டவாளங்கள்

கொழும்பு, ஜன. 30

தடம்புரள்வுகளை குறைக்கவும், ரயில் சேவைகளை மேம்படுத்தவும், 45 அடி நீளமுள்ள 10,000 ரயில் தண்டவாளங்களை சீனாவில் இருந்து இரண்டு மாதங்களுக்குள் இறக்குமதி செய்ய எதிர்பார்த்துள்ளதாக ரயில் திணைக்களத்தின் பொது முகாமையாளர் டபிள்யூ.ஏ. எஸ்.குணசிங்க தெரிவித்தார்.

அண்மைக் காலமாக ரயில் தடம்புரண்ட சம்பவங்களை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இரண்டு மாதங்களில் இறக்குமதிகள் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் புனரமைப்பு இடம்பெறும் போது ரயில் பாதைகள் மூடப்படாது என்றும் அவர் உறுதியளித்தார்.

அதுவரையில் இருக்கும் வளங்களைக் கொண்டு ரயில் சேவைகளை நிர்வகிக்க வேண்டும். சில மாற்றீடுகள் ஏற்கனவே செய்யப்பட்டு வருகின்றன. பாணந்துறை-வாதுவ ரயில் மார்க்கத்தின் பல இடங்களில் தண்டவாளங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

ரயில் தண்டவாளங்களை இறக்குமதி செய்ய ஒரு பில்லியனுக்கும் அதிகமாக செலவாகும் என எதிர்பார்க்கப்படுவதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 10-20 ஆண்டுகளுக்குள் மாற்றியமைக்கப்பட வேண்டிய தண்டவாளங்கள், விலைமனு கோரப்படாததால், மேம்படுத்தப்படவில்லை என்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார்.

மேலும், கரையோர தண்டவாளங்களின் நிலைமை மோசமாக உள்ளது. கடலுக்கு அருகில் இருப்பதால் ஐந்து ஆண்டுகளுக்குள் அவற்றை மாற்ற வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், ஓராண்டு கால எல்லைக்குள் அவை சரிசெய்யப்படுமென்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.


## காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவு சிறுகதைப் போட்டி



மறைந்த எழுத்தாளர் காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவாக ஆண்டுதோறும் பத்திரிகைகளில் வெளிவந்த சிறுகதைகளில் மிகச்சிறந்த சிறுகதை ஒன்றைத் தெரிவுசெய்து பரிசளிக்க காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை தீர்மானித்திருக்கின்றது.

2022ம் ஆண்டு வெளிவந்த சிறுகதைகள் இந்த தெரிவில் இடம்பெறவிருக்கின்றன. அவ்வாறு முதல்தடவையாக 2022ல் வெளிந்த உங்கள் சிறுகதைகளின் பிரதியை அனுப்பிவையுங்கள்.

அததோனோடு இணைந்ததாக புதிதாக எழுதப்பட்ட (இதுவரை வெளிவராத) சிறுகதைகளில் மூன்று சிறுகதைகளை தெரிவுசெய்து பரிசு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் எழுத்தாளர்கள் தமது சிறுகதைகளை அனுப்பிவைக்கலாம்.

**சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**
**காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை**
**707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ஊடக அனுசரணை ஈழநாடு


# தனுஷ்க குணதிலக குறித்து விசாரிப்பதற்கு சட்டமா அதிபர் அமைச்சுக்கு ஆலோசனை

கொழும்பு, ஜன. 30

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணியை பிரதிநிதித்துவப்படுத்திய நிலையில், பெண் ஒருவரை பாலியல் வன்கொடுமை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்கவின் நடத்தை குறித்து விசாரணை நடத்துமாறு விளையாட்டுத்துறை அமைச்சருக்கு சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன் அவர், கிரிக்கெட் அல்லது வேறு எந்த விளையாட்டிலும் தொழில் ரீதியாக பங்கேற்பதைத் தடுக்கும் வகையில் அவருக்கு தடை விதிக்குமாறு சட்டமா அதிபர் ஆலோசனை கூறியுள்ளார்.

ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி சரோஜினி குசலா வீரவர்தன தலைமையிலான குழுவினால் தொகுக்கப்பட்ட அறிக்கையின் உள்ளடக்கங்களை ஆராய்ந்த பின்னர் சட்டமா அதிபர், தமது பரிந்துரைகள் அடங்கிய கடிதம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இருபதுக்கு 20 உலகக் கிண்ணப் போட்டியின்போது இலங்கை கிரிக்கெட் அணியின் நடத்தை தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்க குழு நியமிக்கப்பட்டுள்ளது.

குணதிலக்க தொடர்பில் அவுஸ்திரேலிய சட்ட அமைப்பு என்ன நடவடிக்கை எடுத்தாலும், இலங்கையின் சட்டத்தின் படி அவருக்கு எதிராக பொலிஸார் தனியாக நடவடிக்கை எடுக்க முடியும் என சட்டமா அதிபர் விளையாட்டுத்துறை அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# இன்று முதல் மழை அதிகரிக்கும்

கொழும்பு, ஜன. 30

இன்று முதல் நாடு முழுவதும் மழை அதிகரிக்கும் சாத்தியம் அதிகமாக காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, நாளை மற்றும் பெப்ரவரி முதலாம் ஆம் திகதி நாடளாவிய ரீதியில் பல இடங்களில் சுமார் 150 மில்லிமீற்றர் வரையான கடும் மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் அந்த திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

பிற்பகல் அல்லது இரவு வேளையில் நாட்டின் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது மக்களை வளிமண்டலவியல் திணைக்களம் கோரியுள்ளது.

வங்காள விரிகுடாவின் தென்கிழக்கு கடற்பிராந்தியத்திற்கு மேலாக தாழமுக்கம் நிலைகொண்டுள்ளதுடன், நாளை மேலும் தீவிரமடைந்து வங்காள விரிகுடாவின் தென்மேற்கு பகுதியில் நிலைகொள்ளும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (அ)

# சுதந்திர தினத்தையொட்டி விசேட கண்காட்சி ஏற்பாடு

கொழும்பு, ஜன. 30

75 ஆவது சுதந்திரதின விழாவையொட்டி, தேசிய சுவடிகள் காப்பக திணைக்களம், மத்திய கலாசார நிதியம், தொல்பொருள் திணைக்களம் மற்றும் அருங்காட்சிய திணைக்களம் ஆகியவை இணைந்து கண்காட்சியொன்றை நடத்த திட்டமிட்டுள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம், 5 ஆம் திகதிகளில் தேசிய அருங்காட்சியகத்தில் குறித்த கண்காட்சியை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அரிய பல விடயங்களை மக்களுக்கு கண்டுகொள்ள முடியுமென பௌத்த சமய அலுவல்கள் மற்றும் கலாசார அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன தெரிவித்தார்.

இந்த கண்காட்சியை பொதுமக்கள் இலவசமாக பார்வையிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.


# பறவைக் காய்ச்சல் அபாயத்தினால் முட்டை இறக்குமதி பாதிப்படையும்!

கொழும்பு, ஜன. 30

இந்தியாவில் தொடர்ச்சியாக பரவி வரும் பறவைக்காய்ச்சல் காரணமாக முட்டைகளை இறக்குமதி செய்ய அனுமதிக்க முடியாது என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஹேமாலி கொத்தலாவல, அரச வர்த்தக கூட்டுத்தாபனத்துக்கு அறிவித்துள்ளார்.

சுகாதார ஆலோசனைக் குழுவின் ஆய்வறிக்கையின் படி, இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய தொழில்நுட்ப ரீதியாக அனுமதி வழங்க முடியாது என அவர் குறிப்பிட்டார்.

ஒக்ரோபர் 2021 முதல் செப்ரெம்பர் 2022 வரை ஐரோப்பாவில் 2,500 பறவைக் காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.



2006 முதல் அவ்வப்போது இந்தியாவில் பறவைக் காய்ச்சல் தொற்று பரவி வருகின்ற நிலையில், முட்டை இறக்குமதிக்கு அனுமதி வழங்க முடியாதுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் அனுமதியுடன் வெளிநாடுகளில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்யவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்ணான்டோ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சுதந்திரம் இல்லாத நாட்டில் சுதந்திர தின நிகழ்வு எதற்கு?

## மன்னாரில் போராட்டத்துக்கு அழைப்பு

மன்னார், ஜன. 30

**இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாங்கள் கறுப்பு தினமான அனுஷ்டிக்கின்றோம் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் ஒன்றிய தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.**

மன்னாரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது. எனினும் சுதந்திரம் இல்லாத நாட்டில் சுதந்திர தினம் எதற்காக என்பதன் அடிப்படையில் தமிழர்களாகிய நாங்களும் குறிப்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் அன்றைய நாளை கறுப்பு தினமாக அனுஷ்டிக்க இருக்கின்றோம்.

பல்கலைக்கழக மாணவர்கள் முன் நின்று ஏற்பாடுகளை மேற்கொண்டு உள்ளார்கள்.எனவே கறுப்பு தினத்தை அனுஷ்டிக்க மன்னார் மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புக்கள், அரசியல் பிரதிநிதிகள் பொதுமக்கள், உள்ளடங்களாக அனைத்து தரப்பினரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மன்னாருக்கு வருகை தர உள்ளனர். அனைவரும் அவர்களுடன் இணைந்து கொள்ளவேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்து எங்களுக்கு ஒரு முடிவு கிடைக்கவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாங்கள் சுமார் 14 வருடங்களாக வீதியில் நின்று போராடி வருகிறோம்.எங்கள் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் பல்கலைக்கழக மாணவர்கள் எங்களுடன் இணைந்து கொள்கிறார்கள்.

இந்த அரசாங்கத்தை நாங்கள் நம்பவில்லை. ஒவ்வொரு மாதமும் நாங்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருகிறோம். சர்வதேச நாடுகளும் இது வரை எமக்கு உரிய தீர்வை பெற்றுத் தரவில்லை.காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிய 128 தாய்மார்கள் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த உறவுகள் காணாமல் ஆக்கப்படட தமது உறவுகள்,பிள்ளைகள் வருவார்கள் என்று ஏங்கித் தவித்த நிலையில் அவர்கள் மரணித்துள்ளனர்.

எனவே சுதந்திர தினத்தை முன்னிட்டு எமது கருப்பு தின போராட்டத்திற்கு அனைத்து தரப்புகளும் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும்-என்றார். (அ)

# பிரித்தானிய பெண்ணின் தங்க ஆபரணம் கொள்ளை

கொழும்பு, ஜன. 30

பிரித்தானிய பெண்ணொருவர் கொள்வனவு செய்த 18 ஆயிரத்து 500 ஸ்டேர்லிங் பவுண் பெறுமதியான தங்க வலையல், காதணி உட்பட ஆபரண தொகை கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக கிடைத்த முறைப்பாட்டை அடுத்து களுத்துறை வடக்கு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

களுத்துறை வடக்கில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் தங்கியிருந்த பிரித்தானிய பெண்ணான லின்டா பிரவ்மன் என்ற பெண் இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

முறைப்பாட்டாளரான பிரித்தானிய பெண் சுற்றுலா விடுதியில் இருந்து முச்சக்கர வண்டியில் அளுத்கம பிரதேசத்துக்கு சென்று பிரதான நகைக்கடை ஒன்றில் தங்க ஆபரணங்களை கொள்வனவு செய்துள்ளார்.

பிரித்தானிய பெண் தங்க ஆபரணங்களை கொள்வனவு செய்தமை தொடர்பில் இரண்டு சுற்றுலா வழிக்காட்டிகள் வாக்குமூலம் வழங்கியுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

கொள்ளையிடப்பட்டுள்ள தங்க ஆபரணங்களின் இலங்கை ரூபா பெறுமதி 83 லட்சம் ரூபாவுக்கும் மேல் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சட்டவிரோதமாக கடத்தப்படும் கையடக்கத் தொலைபேசிகள்!

கொழும்பு, ஜன. 30

சட்டவிரோதமான முறையில் கையடக்க தொலைபேசி இறக்குமதி செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் தொலைபேசிகள் கடத்தல் இடம்பெற்று வருவதாக கையடக்க தொலைபேசி இறக்குமதியாளர்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கு வரி வருமானத்தை இழக்கச் செய்யும் வகையில் இவ்வாறு பொதிகள் ஊடாக இலங்கைக்கு கையடக்கத் தொலைபேசிகள் இறக்குமதி செய்யப்படுவதாக கையடக்கத் தொலைபேசி இறக்குமதியாளர்களின் ஒன்றியத்தின் உறுப்பினர் பிரியந்த ஜயசிங்க குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கைத் தொலைபேசிகள் இறக்குமதியின்போது, அரசுக்கு செலுத்தவேண்டிய வரியை செலுத்தாமல் பொதிகளின் ஊடாக கைப்பேசிகள் கொண்டு வரப்படுவதை நாங்கள் கண்டு பிடித்துள்ளோம்.

இதன் ஊடாக பாரியளவில் வரி வருமானம் இழக்கப்படும் நிலையில், 2021-2022 ஆண்டுகளில் மட்டும் சுமார் 100 மில்லியன் டொலர்கள் உண்டியல் முறையில் வெளியேறியுள்ளது. ஏற்றுக்கொள்ளப்பட்ட வங்கி முறையின் கீழ் எந்த பரிவர்த்தனையும் இடம்பெறுவதில்லை.

எங்களின் தோராயமான கணக்கீடுகளின்படி, அரசாங்கத்திற்கு சுமார் மூன்றரை பில்லியன் ரூபாய் வரி இழப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட 20 பேர் கொண்ட குழுவே இவ்வாறு தொலைபேசிகளை இலங்கைக்கு கொண்டு வருகின்றது. இது குறித்து அரசிடம் எந்த தகவலும் இல்லை. எனவே, குறித்த கைபேசிகளை இவ்வாறு கொண்டு வருவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும்-என்றார். (அ)

# ஜனவரி மாதத்தில் மட்டும் 4,400 டெங்கு நோயாளர்கள்!

கொழும்பு, ஜன. 30

நாட்டில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 4,387 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மற்றும் புத்தளம் மாவட்டங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். 2023 ஆம் ஆண்டில் இது வரை கொழும்பில் 741 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதோடு புத்தளத்தில் 625 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச் சின் தொற்றுநோய் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கம்பஹாவில் 491 பேரும், கல்முனையில் 397 பேரும், யாழ்ப்பாணத்தில் 351 பேரும் பதிவாகியுள்ளனர்.

2022 இல் இலங்கையில் 66,376 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதிகளவானோர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளமையினால், 3 நாள் காய்ச்சல் நீடித்தால், பொதுமக்கள் மருத்துவ சிகிச்சை பெற வேண்டும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)




# வசந்த முதலிகே விடுதலைக்காக யாழில் கையெழுத்து போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 30

கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலையான அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வசந்த முதலிகேயை அனைத்து வழக்குகளிளிருந்தும் முற்றாக விடுதலை செய்யக் கோரியும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்று முழுதாக நீக்கக் கோரியும் பல்கலைக்கழக மாணவர்களால் கையெழுத்துப் போராட்டமானது நேற்று யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டது. (அ)

# தேர்தல் வர்த்தமானி அறிவித்தல் அச்சிடுவதற்கு கிடைக்கவில்லை!

கொழும்பு, ஜன. 30

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் செயற்பாடுகளை அறிவிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை அச்சிடுவதற்கான அறிவுறுத்தல், இதுவரை அச்சகத் திணைக்களத்துக்கு கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை அரசாங்க தகவல் திணைக்களத்தின் அரச செய்திப் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தன கருணாரத்ன கூறினார். திணைக்களத்தின் அரச செய்தி பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தன கருணாரத்னவின் கையொப்பத்தில் இந்த விசேட அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை , உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தேவையான ஆவணங்களை அச்சடிக்கும் பணி அரச அச்சகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அரச அச்சக அலுவலகத்தின் தலைவர் திருமதி கங்கானி லியனகே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உள்ளூராட்சித் தேர்தலில் 82 ஆயிரம் வேட்பாளர்கள்!

கொழும்பு, ஜன. 30

மார்ச் 9ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் 340 உள்ளூராட்சி சபைகளில் 8,771 ஆசனங்களுக்கு 30 இற்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த சுமார் 82,000 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

இந்த 82,000 வேட்பாளர்கள், அவர்களது கட்சிப் பெயர்கள் மற்றும் சின்னங்கள் தொடர்பான தகவல்களை மூன்று மொழிகளிலும் ஒப்படைக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அறிவித்துள்ளது.

இதற்கான அறிவிப்பில் கையொப்பமிட்ட தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க, இது தொடர்பான விவரங்கள் இன்று வர்த்தமானியில் அச்சிடுவதற்கு அனுப்பி வைக்கப்படும் என அவர் தெரிவித்தார். பெப்ரவரி 25 மற்றும் 26 ஆகிய திகதிகளில் வாக்குச் சீட்டுக்கள் வழங்கப்படும்.

இதற்கிடையில், தேர்தலை நடத்துவதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவதை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு, ஆணைக்குழு தலைவர் புஞ்சிஹேவ நேற்று முன் தினம் மாலை கடிதம் ஒன்றை அனுப்பினார்.

ஆணைக்குழுவின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சிரமம் இருப்பின் விதிகளின் கீழ் அதிகாரங்களை ஆணையாளர் நாயகத்திற்கு வழங்க முடியும் என தேர்தல் ஆணையத்தின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (அ)

# சிறுபோகத்தில் நெல் தவிர்ந்த பயிர்களுக்கே முன்னுரிமை

கொழும்பு, ஜன. 30

இந்த வருட சிறுபோகத்தில் நெற் செய்கைக்கு மேலதிகமாக ஏனைய பயிர்களை பயிரிடுவதற்கு முன்னுரிமையளிக்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக இரசாயன உரத்தை தட்டுப்பாடு இன்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக, விவசாய அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, பெரும்போகத்தில் சேதன உரங்களை கொள்வனவு செய்வதற்கு 16,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நெல் செய்கை மேற்கொள்ளப்படும் ஒரு ஹெக்ரேயர் நிலத்துக்கு இருபதாயிரம் ரூபாவும், இரண்டு ஹெக்ரேயருக்கு 40,000 ரூபாவும் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சேதன உரங்களை விநியோகிப்பதற்காக நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் மாவட்டக் குழுக்களை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 13 ஆவது திருத்தம் குறித்து ஜே.வி.பியின் நிலை என்ன?

## கேள்வி எழுப்புகிறார் சன்ன ஜயசுமண



கொழும்பு, ஜன. 30

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யோசனை முன்வைத்துள்ளபோல், இன்னும் சில வாரங்களுக்குள் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய மக்கள் சக்தி இணங்குமா இல்லையா என்ற விடயத்தை தாமதமின்றி வெளியிடவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.**

மதவாச்சியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

13ஆவது திருத்தச் சட்டத்தினால் ஏற்படும் பின்விளைவுகள் குறித்து ஓரளவுக்கு புரிந்துக்கொண்டதன் காரணமாகவே ஜே.ஆர்.ஜெயவர்தன முதல் கோட்டாபய ராஜபக்ஷ வரை பதவியில் இருந்து ஏழு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை.

இந்த சட்டம் குறித்து அப்போது தீர்ப்பு வழங்கியிருந்த உயர் நீதிமன்றத்தின் நான்கு நீதியரசர்கள் 13ஆவது திருத்தச் சட்டம் காரணமாக நாட்டின் ஒருமைப்பாடு இல்லாமல்போகும் என கூறியிருந்தனர்.

மேலும் நான்கு நீதியரசர்கள் அது நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு பிரச்னையாக இருக்காது என்றும், ஒரு நீதியரசர் சில ஷரத்துக்களுக்கு உட்பட்டால் ஒருமைப்பாட்டை பாதுகாக்கலாம் எனக் கூறியிருந்தார்.

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை தவறாக அர்த்தப்படுத்தும் ரணில் விக்கிரமசிங்க, ஜே.ஆர். ஜெயவர்தன செய்த மோசடி பற்றி அமைதியாக இருப்பது ஏன்?

1987 ஆம் ஆண்டு 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்படும்போது அதனைக் கடுமையாக எதிர்த்து நாட்டில் பெரும் போராட்டத்தை முன்னெடுத்து உயிர்ச் சேதங்களை, சொத்துச் சேதங்களை ஏற்படுத்தி உயிர்த் தியாகத்துடன் செயற்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள தேசிய மக்கள் சக்தி, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான தனது நிலைப்பாட்டை நாட்டுக்கு வெளியிட வேண்டும்.

தமக்கு சம்பந்தமில்லாத விடயம் போன்று மக்கள் விடுதலை முன்னணி தற்போது தம்மை தற்காத்து கொண்டிருப்பது பாரதூரமான மோசடி.

அதேபோல 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்படும்போது தற்போதைய சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன அன்று தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகினார். அவர் தற்போது என்ன நிலைப்பாட்டை கொண்டுள்ளார்?.

மேலும் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிராக செயற்பட்டு வந்த தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தன, ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ள இந்த வேலைத்திட்டம் தொடர்பான தனது நிலைப்பாட்டை நாட்டு வெளியிடவேண்டும்-என்றார். (அ)

# தேர்தல் நடக்குமா இல்லையா? இறைவன் மாத்திரமே அறிவார்

## கூறுகின்றார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, ஜன. 30

தேர்தல் இடம்பெறுமா இல்லையா என்பது தற்போதும் நிச்சயமற்ற நிலைமையிலேயே உள்ளது. அதனை இறைவன் மாத்திரமே அறிவார்.

வேட்பாளர்கள் தமது பணத்தைச் செலவிட முன்னர் உண்மையில் தேர்தல் இடம்பெறுமா இல்லையா என்பதை அரசாங்கம் அறிவிக்கவேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கை சின்னத்தில் போட்டியிடும் தொகுதிகளிலும் , கூட்டணியாக போட்டியிடும் தொகுதிகளிலும் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்பது தொடர்பில் மத்திய குழு கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டது.

அதற்கமைய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் விரைவில் மாவட்ட மட்டத்தில் எமது கூட்டங்கள் ஆரம்பமாகும். அதற்கமைய கம்பஹாவில் எமது முதலாவது கூட்டத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஹெலிகொப்டர் சின்னத்திலான கூட்டணியில் எவ்வித பிளவுகளையும் ஏற்படுத்திக் கொள்ள நாம் விரும்பவில்லை. எனவே கூட்டணியாக போட்டியிடும் தொகுதிகளில் எவ்வாறு இணைந்து செயற்படுவது என்பது தொடர்பிலேயே அவதானம் செலுத்தியுள்ளோம்.

இந்த அரசாங்கம் தேர்தலை நடத்துமா இல்லையா என்பதை அந்தக் கடவுள் மாத்திரமே அறிவார். காரணம் அரசாங்கம் ஆரம்பம் முதலே தேர்தலை நடத்துவதற்கான நிதி இல்லை என்று கூறிக் கொண்டிருக்கிறது.

இதற்கு மத்தியில் தற்போது ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் பதவி விலகியுள்ளார். மின் துண்டிப்பை நிறுத்த முடியாது என்று கூறுகின்றனர். இவ்வாறு வெவ்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே நாம் முன்னோக்கிச் சென்றுக் கொண்டிருக்கின்றோம்.

எனவே உண்மையில் தேர்தல் இடம்பெறுமா இல்லையா என்பதை அரசாங்கம் விரைவில் அறிவிக்கவேண்டும். காரணம் வேட்பாளர் தமது பணத்தை செலவிட முன்னர் அவர்களுக்கு தீர்க்கமான முடிவொன்று வழங்கப்படவேண்டும். தற்போதும் தேர்தல் நிச்சயமற்ற நிலையிலேயே உள்ளது. விரைவில் இது நிச்சயமான நிலையை அடையும் என்று எதிர்பார்க்கின்றோம்-என்றார். (அ)

# யூரியா உரத்தில் புழுக்கள் உடன் ஆராய பணிப்புரை

கொழும்பு, ஜன. 30

உர மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் யூரியா உரங்களில் புழுக்கள் காணப்பட்டமை தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை வழங்குமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அரசாங்கத்தின் உர மானியத்தின் கீழ் பெறப்பட்ட யூரியா உரத்தில் புழுக்கள் இருப்பதாக மகாவலி பி பிராந்தியத்தின் திம்புலாகல மனம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதன்படி மனம்பிட்டிய விவசாய சேவை நிலைய அதிகாரிகளும் இதனை பரிசோதிக்க சென்றுள்ளனர்.

பின்னர், உர மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக விவசாய திணைக்களத்துக்கு கொண்டு செல்லப்பட்டன.

எனினும், யூரியா அமோனியா நிறைந்த இரசாயன உரம் என்றும், அதில் எந்த உயிரினமும் வாழ முடியாது என்றும் தேசிய உர செயலகம் கூறியுள்ளது. (அ)

# 13 ஆவது திருத்தச் சட்டத்தை இனவாதமாக கையாள முயற்சி

## லக்ஷ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 30

நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு உள்ளாக்கியவர்கள் தற்போது புதிய நாடகமொன்றை அரங்கேற்றுவதற்காகவே 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

இதனை அடிப்படையாகக் கொண்டு இனவாதத்தை தூண்டுவதற்கே முயற்சிக்கப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

13 ஆவது திருத்தம் இன்றும் அரசியலமைப்பில் காணப்படுகிறது. 13 ஆவது திருத்தத்தின் கீழ் அனைத்து கட்சிகளும் தேர்தலில் போட்டிடவுள்ளன.

ஐக்கிய தேசிய கட்சி, பொதுஜன பெரமுன, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளன.

மாகாணசபைகளை அனைத்து தரப்பும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளன. இதனை ஏற்றுக் கொண்டமையின் காரணமாக வல்லவா தேர்தலில் போட்டியிட்டனர்? தற்போது தேர்தலுக்காக புதிய நாடகம் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

நாட்டை வங்குரோத்தடையச் செய்துள்ளமையால், இனவாதத்தைத் தூண்டுவதே இலகுவான விடயமாகும். எனவே தான் அதனை செய்வதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றனர்.

பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை எந்த வகையிலும் தேர்தலில் தாக்கம் செலுத்தாது. தேர்தலை நடத்துவதற்கான உரிமை தேர்தல் ஆணைக்குழுவிடமே காணப்படுகிறது.

தேர்தல் ஆணைக்குழு சுயாதீனமானதாகும். இதற்கு எவராலும் அழுத்தம் பிரயோகிக்க முடியாது. அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமையான வாக்குரிமையை எந்தவொரு நிறுவனத்தினாலும் பறிக்க முடியாது-என்றார். (அ)

# ஆசிரியையை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்தவர் கைது!

கொழும்பு, ஜன. 30

வர்த்தக நிலையமொன்றுக்கு சென்றுக்கொண்டிருந்த ஆசிரியை ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்தார் எனக் கூறப்படும் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக மொரகஹஹேன பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் ஹொரணை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் என்பதுடன் சந்தேக நபர் வந்த சிறிய லொறியொன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

பாதிக்கப்பட்ட 39 வயதுடைய ஆசிரியை ஹொரணை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மொரகஹஹேன-மில்லவ-தம்மாநந்த ப்ளேஸில் குறித்த ஆசிரியர் வர்த்தக நிலையமொன்றுக்கு சென்றுக்கொண்டிருந்த போது, லொறியில் வந்த சந்தேக நபர், முன்னாள் ஆசிரியையின் பாதையை குறுக்கிட்டு அவரை கட்டிப்பிடித்து பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்த முயற்சித்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பெண் பலத்த முயற்சிக்கு பின் அங்கிருந்து தப்பியோடி அருகிலுள்ள வீடொன்றுக்கு சென்றுள்ளார்.

இந்நிலையில், சந்தேகநபர் அவரை பின்தொடர்ந்து வந்து அந்த வீட்டாரிடம் விசாரித்த போது, பின்னால் இருந்த கதவு ஊடாக அவர் தப்பி ஓடிவிட்டதாக வீட்டு உரிமையாளர் சந்தேக நபரிடம் கூறியுள்ளார்.

இதனையடுத்து, குறித்த ஆசிரியை 119 அவசர அழைப்புப் பிரிவுக்கு செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் மொரகஹஹேன பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் துசித விக்ரமரத்ன தலைமையிலான குழுவினர் சந்தேகநபரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# 13ஆவது திருத்தம் குறித்து ஆழமாக ஆராயவேண்டும்

## சிறிலங்கா பொதுஜன பெரமுன கோரிக்கை

கொழும்பு, ஜன. 30

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக வழங்குவது தொடர்பில் ஆழமாக ஆய்வு செய்யப்படவேண்டுமென சிறிலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது. கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் இது தொடர்பில் சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக கடமையாற்றிய காலத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தாது, தற்பொழுது நடைமுறைப்படுத்த எத்தனிப்பது குறித்து ஆழமாக ஆய்வு செய்யப்படவேண்டும்.

ஜே.ஆர். ஜயவர்தன முதல் கோட்டாபய ராஜபக்ஷ வரையிலான ஜனாதிபதிகள் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தாமைக்கு ஏதுவான காரணிகள் தொடர்ந்தும் சமூகத்தில் காணப்படுகின்றனவா என்பதனை ஆழமாக கவனிக்கவேண்டும். இதன் அடிப்படையிலேயே 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்து தீர்மானம் எடுக்கப்படவேண்டும்.

அண்மையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் ஆழமாக ஆராயாமல் இந்த 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான இணக்கப்பாட்டை தாம் வெளிப்படுத்தவில்லை-என்றார். (அ)

# “தமிழர்கள் கோரும் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவேன்” - ஜனாதிபதி அறிவிப்பு

**“எமது அரசியலமைப்பில் கடந்த 37 ஆண்டுகளாக 13ஆவது அரசியல் திருத்தம் உள்ளடக்கப்பட்டுள்ளது. நான் அதை நடைமுறைப்படுத்த வேண்டும். நான் அதை நடைமுறைப்படுத்தாமல் இருக்க வேண்டுமாயின் நாடாளுமன்றத்தில் யாராவது 22ஆவது மறுசீரமைப்பைக் கொண்டு வந்து 13ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்ய வேண்டும்.”**



இலங்கை தமிழர்களின் பிரச்சனைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் வகையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் நடத்தப்பட்ட சர்வகட்சி மாநாட்டில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் வகையிலான, அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் சர்வகட்சி மாநாடு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் வியாழனன்று இந்த சர்வகட்சி மாநாடு நடைபெற்றது.

**ஜனாதிபதியின் அழைப்பு**

இலங்கையில் நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வேலைத் திட்டம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடும் நோக்கில் இந்த சர்வகட்சி மாநாட்டிற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு (25) அறிவித்திருந்தது.

ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் திகதி கட்சித் தலைவர்கள் கூட்டமொன்று நடத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட நல்லிணக்க மேம்பாட்டு வேலைத் திட்டம் குறித்தே, சர்வகட்சி மாநாட்டில் கலந்துரையாடப்பட்டு உள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

**சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணித்த தலைவர்கள்**

பிரதான எதிர்கட்சியாக விளங்கும் ஐக்கிய மக்கள் சக்தி, இந்த சர்வகட்சி மாநாட்டை புறக்கணித்திருந்தது.

“அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலான தீர்வு திட்டத்தை வழங்க ஜனாதிபதி முன்வரவில்லை என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு. அதனாலேயே, சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் எந்தெந்த விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்ற ஒரு விடயம் இருக்கின்றது. ஆனால், ஜனாதிபதியின் அனைத்து விடயங்களிலும் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

அதனாலேயே பிரதான எதிர்கட்சி என்ற வகையில் நாம் மாநாட்டைப் புறக்கணித்தோம்,” என ஐக்கிய மக்கள் சக்தியின் தமிழ் பிரிவு ஊடகப் பேச்சாளர் உமாச்சந்திரா பிரகாஷ் தெரிவித்தார்.

அத்துடன், மக்கள் விடுதலை முன்னணியும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

“முதலில் அரசாங்கத்திற்குள் ஒரு நிலைப்பாட்டிற்கு வர வேண்டும். அதிகாரப் பகிர்வு தொடர்பிலான ரணில் விக்ரமசிங்கவின் கொள்கைக்கு, ராஜபக்ஸ தரப்பினர் விருப்பமா? தினேஷ் குணவர்தன விருப்பமா? பிரசன்ன ரணதுங்க விருப்பமா? முதலில் இவர்களுக்கு







இடையில் இணக்கப்பாடொன்று எட்டப்பட வேண்டும். அரசாங்கத்தின் பக்கத்தில் தேசிய பிரச்னைக்குத் தீர்வை வெளிப்படுத்தும் சட்டமூலமொன்று முன்வைக்க வேண்டும்.

அது முன்வைக்கப்பட்ட பின்னர், கலந்துரையாடல்களை நடத்த முடியும். போலியாக தேநீர் அருந்தி விட்டு, கேக் துண்டொன்றை சாப்பிட்டு, கலந்துரையாடி சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கு நாம் இணைய மாட்டோம்,” என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் டொலோ கட்சியும் பங்கேற்றவில்லை.

இந்த விடயம் தொடர்பில் டொலோ கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கல நாதனிடம் வினவியபோது. “அரசியல் கைதிகளின் விடுதலை, காணி அபகரிப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்னை என முக்கியமான பொது விடயங்களைக் கூறியிருந்தோம்.

நாம் கோரிய ஒரு விடயம்கூட நடக்கவில்லை. சும்மா இருந்து பேசிவிட்டுச் செல்லக்கூடாது. இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் வந்து, 13வது திருத்தத்தை அமல்படுத்துமாறு சொல்லியிருக்கின்றார்.

அது சம்பந்தமாகவே இந்தக் கூட்டத்தை கூட்டியிருக்கலாம். சொல்லப்பட்ட விடயங்கள் ஒன்றுமே நடக்காத இடத்தில் பேச்சுவார்த்தைக்குச் செல்வது வீணானது. இந்த முக்கிய விடயங்கள் நடந்தால்தான், இனப் பிரச்சனைக்கான பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள முடியும்,” என செல்வம் அடைக்கல நாதன் தெரிவிக்கின்றார்.

இந்த சர்வகட்சி மாநாட்டில் புளொட் அமைப்பு கலந்துகொள்ளாமை குறித்து, அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனிடம் வினவியபோது,

“நாங்கள் முழுமையாகப் புறக்கணிக்கவில்லை. அவர் சொன்ன விடயங்களான காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் உள்ளிட்ட விடயங்களை முதலில் செய்து முடித்துவிட்டதன் பின்னர், நாம் கலந்துகொள்வோம். அதுவரை பார்த்துக்கொண்டிருக்கின்றோம்,” என தர்மலிங்கம் சித்தார்த்தன் குறிப்பிடுகின்றார்.

மலையகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ் முற்போக்கு கூட்டணியும் இந்த சர்வகட்சி மாநாட்டை புறக்கணித்திருந்தது.

இது தொடர்பில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

“தேசிய இனப்பிரச்னை தீர்வு தொடர்பான உங்கள் அறிவிக்கப்பட்ட செயற்பாட்டில், இந்திய வம்சாவளி மலையக தமிழர்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளுடனும் எமது மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பிலும் பேசுங்கள்” என நாம் திரும்ப, திரும்ப ஜனாதிபதி விக்ரமசிங்கவிடம் கோரினோம்.

“எமது பிரச்னைகள் பற்றிப் பேச உங்கள் தலைமையில் விசேட அதிகாரம் கொண்ட குழுவை நியமியுங்கள். ஆனால், பகிரங்க மேடைகளில் இருந்து கூறப்பட்ட சில கருத்துகளைத் தவிர, இது தொடர்பில் இதுவரை ஜனாதிபதி விக்ரமசிங்க அதிகாரபூர்வமாக எதுவும் செய்யவில்லை.

ஈழத்தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு, பொறுப்பு கூறல் தொடர்புகளில் வடகிழக்கு கட்சிகளுடன் நடத்தப்படும் பேச்சுகளை நாம் முழு மனதுடன் வரவேற்கிறோம். ஆனால், மலையக தமிழரின் அரசியல் அபிலாஷைகள் இன்று “தோட்ட வரம்புகளுக்கு“ வெளியே வளர்ந்து விட்டன என்பதை அனைத்து தரப்பினரும் அறிய வேண்டும்.

தேசிய இனப்பிரச்னை என்பது இன்று வடக்கு, கிழக்கை மட்டும் மையமாகக் கொண்டதல்ல, அது தேசியமயமானது என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் முற்போக்கு கூட்டணி, ஓர் எதிரணி கட்சியாக இருந்தாலும்கூட, “தேசிய இன பிரச்னை தொடர்பில் பேச்சுகளை நடத்த ஜனாதிபதி விக்ரமசிங்கவுக்கு மக்கள் ஆணை இருக்கிறதா” என நாம் கேள்வி எழுப்பவில்லை.

தேசிய இன பிரச்னையே இந்நாட்டின் பிரதான பிரச்னை. இந்நாட்டின் எந்தவோர் அரசு தலைவருக்கும் இதற்காக விசேட மக்களாணை அவசியமில்லை என்பது எமது நிலைப்பாடு. இந்தக் கருத்தை நாம் நமது வடகிழக்கு நட்பு கட்சிகளுடனும் பரிமாற்றி கொண்டுள்ளோம். ஆகவே, இன்று ஜனாதிபதி விக்ரமசிங்கவின் இது தொடர்பான நடத்தையில் நாம் அதிருப்தியடைந்துள்ளோம்,” என மனோ கணேசன் கூறுகின்றார்.

சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்டவர்களின் நிலைப்பாடு

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

“இந்த ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர், அனைத்து பிரச்னைகளுக்கும் தீர்வைப் பெற்றுத் தருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதி வழங்கியிருந்தார். எனினும், இதுவரை அவர் எதையும் செய்யவில்லை.

அதுகுறித்து எமது கவலையை வெளியிட்டோம். எனினும், இந்த விடயங்களை தான் நிச்சயமாகச் செய்வேன் என ஜனாதிபதி மீண்டும் உறுதியளித்தார். 13வது திருத்தம் அரசியலமைப்பில் இருக்கின்ற காரணத்தால், அதை அமல்படுத்தும் பொறுப்பு நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டதனக்கு உள்ளதாக அவர் கூறுகின்றார்.

அதனால், அதை நிறைவேற்றுவேன் எனக் கூறினார். காணி விடுவிப்பு தொடர்பிலும் விரிவாகத் தெளிவூட்டினார். இதை ஒரே நாளில் நடைமுறைக்குக் கொண்டு வர முடியும் என நான் கூறினேன். இதை அமலுக்குக் கொண்டு வருவதற்கு அனைத்து ஆவணங்களும் இருக்கின்றமையால், ஒரு நாள் போதுமானது,” என எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கின்றார்.

நல்லிணக்கம் என்ற பெயரில் இனவாதத்தைத் துண்டும் வகையில் சர்வகட்சி மாநாட்டு பேச்சுவார்த்தை அமைந்திருந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரெலிய ரத்தன தேரர் குறிப்பிடுகின்றார்.

“குறிப்பாக ஒரு விடயத்தைக் கூற வேண்டும். தற்போதைய சூழ்நிலையில், பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்குவதா என்பது தொடர்பில் இல்லை பேச வேண்டும்.

தமிழ், சிங்களம், முஸ்லிம் யாராக இருக்கட்டும். விவசாயம் செய்யத் தயார்

(09ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாடு






# சனிப் பெயர்ச்சி பலன்கள் 2023



## மீனம்



அலைந்து திரிந்து செய்த காரியங்களை சரியாக செய்து முடித்து வெற்றி பெறுவீர்கள். சேமிக்கும் பணத்தை சுப காரியங்களுக்கும் செலவு செய்வீர்கள். வெளியூர், வெளிநாட்டிலிருந்து அனுகூலமான செய்திகள் வந்து சேரும். உடல் ஆரோக்கியத்திலும் இருந்த குறைகள் மறைந்து பொலிவுடன் காணப்படுவீர்கள்.

வழக்கு விவகாரங்களில் வெற்றி உண்டாகும். வங்கிக் கடன்களும் கிடைக்கும். புதிய வண்டி வாகனங்களை வாங்கி செய்தொழிலை விரிவுபடுத்துவீர்கள். தனித்து நின்று போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.

நண்பர்கள் தானாகவே வீடு தேடி வந்து உதவி செய்வார்கள். மேலும் விலகிச் சென்ற நண்பர்களும் திரும்பி வருவார்கள். பேச்சிலும் செயலாற்றும் திறமையாலும் உங்களின் அறிவு முதிர்ச்சி வெளிப்படும்.

ஆன்மிகத்தில் நாட்டம் கூடும். அனைவரும் உங்களை அனுசரித்து செல்வார்கள். குலதெய்வ வழிபாட்டைச் செய்து முடிப்பீர்கள். அரசு வழியிலும் ஆதரவு பெருகும். மற்றபடி உழைப்புக்கேற்ற வருமானம் கிடைக்கும்.

**உத்தியோகஸ்தர்கள்:** விரும்பிய பணியிட மாற்றம் கிடைக்கும். சக ஊழியர்களுடன் சுமுகமான உறவு நிலை தொடருவதால், உங்களின் வேலைகள் குறித்த காலத்துக்குள் நிறைவேறிவிடும். உங்களின் சமயோஜித புத்தியில் தேவையில்லாத பிரச்னைகளில் இருந்து தப்பித்துக் கொள்வீர்கள்.

**வியாபாரிகள்:** கொடுக்கல் - வாங்கலில் கணக்கு விஷயங்களில் சரிபார்த்து நடந்துகொள்ளவும். அதேநேரம் கடன் கொடுத்து வியாபாரத்தைப் பெருக்க வேண்டாம். கூட்டுத் தொழில் புரிவோர் நண்பர்களிடம் உஷாராக நடந்து கொள்ளவும்.

**விவசாயிகள்:** புதிய நிலங்கள் குத்தகைக்கு வந்து சேரும். வங்கிகளிலிருந்து எதிர்பார்த்த கடன்களும் வந்து சேரும். எதிர்பாராத பண வரவு உண்டாகும். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளை நடத்தி மகிழ்வீர்கள்.

**அரசியல்வாதிகள்:** உடல்



ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மேலிடத்தின் ஆதரவுடன் வெளியூர் பயணங்களை மேற்கொண்டு வெற்றி அடைவீர்கள். எவரிடமும் ரகசியங்களையும் பகிர்ந்துகொள்ள வேண்டாம். அதே நேரம் தொண்டர்களின் வட்டாரங்களில் உங்கள் பேச்சுக்கு வரவேற்பு இருக்கும். அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து உங்களின் புகழைத் தக்க வைத்துக் கொள்ளவும்.

**கலைத்துறையினர்:** உங்கள் திறமைகளை ஒன்று சேர கூட்டிக் கொள்ள முயற்சி செய்யுங்கள். இது பிற்கால முன்னேற்றத்துக்கு உதவும். மனச்சோர்வடையாமல் இருக்க தியானம், ப்ராணாயாமம் போன்றவற்றை செய்யுங்கள். சக கலைஞர்களால் நன்மை அடைவீர்கள்.

**பெண்கள்:** குடும்பத்தில் சற்றே குழப்பங்கள் உண்டாகி பின்பு மறையும். உறவினர்களிடமிருந்து மகிழ்ச்சியான செய்திகள் வரும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடந்தேறும். சுய நம்பிக்கையுடன் தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள். மழலைச் செல்வங்களின் வரவால் மகிழ்ச்சி பெருகும்.

**மாணவர்கள்:** கேளிக்கைகளிலும் விளையாட்டிலும் ஈடுபாட்டைக் குறைத்துக் கொள்ளவும். சுற்றுலா அழைத்துச் சென்று உங்கள் ஆசைகளைப் பூர்த்தி செய்வார்கள். படிப்பில் முழு கவனம் செலுத்துங்கள். உங்கள் அனைத்து ஆசைகளும் நிறைவேறும்.

பரிகாரம்: ஸ்ரீ ஐயப்பனை வழிபடவும்.

(முற்றும்)

## தமிழர்கள் கோரும்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றால், அவர்களுக்கு காணிகளை வழங்குங்கள். காணி அதிகாரம் இல்லை. நல்லிணக்கம் என்ற பெயரில், இல்லாத ஓர் இனவாதத்தைத் துண்டும் வகையில் இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

நல்லிணக்கம் இல்லை, நல்லிணக்கத்தை இல்லாதொழிக்கும் ஒரு திட்டம் இது. மக்களுக்கு காணி வழங்க வேண்டுமே தவிர, இனவாதமாக காணிகளைப் பகிர்ந்து அளிக்கக்கூடாது. வடக்கு மக்களுக்கு காணிகளை வழங்குவதற்கு யாரும் எதிர்ப்பு கிடையாது.

ஆனால், காணி அதிகாரம் என்பது வேறொரு விடயம். மக்களிடையே வைராக்கியத்தைத் துண்டும் வகையில் பேச்சுவார்த்தை நடத்தப்படுகின்றது. இதை நாம் செய்யக்கூடாது." என அத்துரெலிய ரத்தன தேரர் குறிப்பிடுகின்றார்.

முதலில் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவே, தேசிய பிரச்னைக்குத் தீர்வை பெற்றுக் கொடுக்க முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவிக்கின்றார்.

"13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து ஒவ்வொருவரின் கருத்துகளையும் பெற்றுக் கொண்டார்கள். அதனால், விரைவில் நல்லதொரு விடயம் இடம்பெறும். கலந்துரையாடலில் நன்மை உள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவிப்போர் இருக்கின்றார்கள். நன்மை இல்லை என அவர்கள் கூறி வருகின்றார்கள். நாடு தொடர்பிலும், நாட்டின் பொருளாதாரம் தொடர்பிலும் சிந்தித்து கருத்துகளைத் தெரிவித்தால், நான் நினைக்கின்றேன். இந்த விடயத்தில் நன்மை இருக்கின்றது என நினைக்கின்றேன்.

தேசிய பிரச்னைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க, முதலில் 13வது திருத்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும்," என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவிக்கின்றார்.

நாட்டை பிளவுப்படுத்தும் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே தாம் உள்ளதாக சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கூறுகின்றார்.

"13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்துப் பேசப்பட்டது. 13வது திருத்தம் நடைமுறைப்படுத்தக் கூடாது என நான் கூறினேன். இது நாட்டைப் பிளவுப்படுத்தும் என்பதற்காகவே இதுவரை இருந்த எந்தவொரு ஜனாதிபதியும் இதை நடைமுறைப் படுத்தவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் இதை நடைமுறைப்படுத்தினால், நிச்சயமாக நாடு பிளவுபடும். அவரும் வரலாற்றில் இணைவார். 13வது திருத்தம் அரசியலமைப்பில் உள்ளமையால், அதை அமல்படுத்தும் பொறுப்பு தமக்கு உள்ளதாக ஜனாதிபதி கூறினார்.

13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த இடமளிக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றோம்," என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர குறிப்பிடுகின்றார்.

அரசியலமைப்பில் 37 ஆண்டுகளாகக் காணப்படுகின்ற 13வது திருத்தத்தைத் தான் நிச்சயம் நிறைவேற்றுவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சர்வகட்சி மாநாட்டில் உறுதியளித்துள்ளார். 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு, யாராவது 22வது திருத்தமொன்றை புதிதாக நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வந்து, 13வது திருத்தத்தை இல்லாது செய்ய வேண்டும் எனக் கூறிய ஜனாதிபதி ரணில் விக்ரசிங்க, அவ்வாறன்றி தன்மீது கோபப்படுவதில் எந்தவித பிரயோசனமும் இல்லை எனக் கூறியுள்ளார்.

"நான் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர். அந்த வகையில் இருக்கும் சட்டத்தை நான் நடைமுறைப்படுத்துவேன். எமது அரசியலமைப்பில் கடந்த 37 ஆண்டுகளாக 13ஆவது அரசியல் திருத்தம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

நான் அதை நடைமுறைப்படுத்த வேண்டும். நான் அதை நடைமுறைப்படுத்தாமல் இருக்க வேண்டுமாயின் நாடாளுமன்றத்தில் யாராவது 22ஆவது மறுசீரமைப்பைக் கொண்டு வந்து 13ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்ய வேண்டும்.

இங்கு என் மீது சத்தம் போடுவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. எனவே இரண்டில் ஒன்று நடைபெற வேண்டும். 13ஆவது அரசியல் மறுசீரமைப்பை நீக்குங்கள். அல்லது 13ஆவது அரசியலமைப்பை நடைமுறைப்படுத்துங்கள்.

அதை இல்லாமல் ஒழிக்காவிட்டால், எமக்கு நடுவில் இருக்க முடியாது. ஒன்றில் அதை ஒழிக்க வேண்டும் இல்லையேல் அதை நடைமுறைப்படுத்த வேண்டும். தனிப்பட்ட பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து யாருக்கு வேண்டுமானாலும் அதை நீக்க முடியும்.

அதற்கு பெரும்பான்மையானோர் தமது விருப்பத்தைத் தெரிவிக்காவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது. அப்படியாயின், 13ஐ நடைமுறைப்படுத்த நேரிடும். ஆனால் இதனால் நாடு பிளவுபடாது. விசேடமாக 13ஆவது அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பில் ஐந்து நீதிபதிகள் அடங்கிய குழுவின் தீர்மானத்துக்கமைய பார்த்தால் நாம் ஒற்றையாட்சியில் இருக்கிறோம். அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு நான் உடன்படுகின்றேன்," என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கின்றார்.

# ஈரோடு இடைத்தேர்தலில் அ.தி.மு.கவுக்கு தொடரும் நெருக்கடி!

தமிழகத்தில் ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதி இடைத் தேர்தலில் அ.தி.மு.க., வேட்பாளரின் வேட்பு மனுவில், அக்கட்சியின் இடைக்கால பொதுச்செயலர் பழனி சாமி கையெழுத்திடுவதை தேர்தல் ஆணையம் ஏற்றுக் கொள்ள மறுத் துள்ளதால், வேட்பாளர் அறிவிப்பில் குழப்பம் நிலவுகிறது. இதை எதிர்த்து தாக்கல்செய்யப்பட்ட மனுவை அவசர வழக்காக விசாரிக்க, இன்று கோரிக்கை விடுக்கும்படி, பழனிசாமி தரப்புக்கு உச்ச நீதிமன்றம் வெள்ளியன்று உத்தரவிட் டது.

கடந்த ஆண்டு ஜூலை 11ல் நடந்த அ.தி.மு.க., பொதுக்குழு கூட்டத்தில், அக்கட்சியின் இடைக்கால பொதுச் செயலராக முன்னாள் முதல்வர் பழனி சாமி அறிவிக்கப்பட்டார்.

அதுவரையிலும் அக்கட்சியில் இருந்து வந்த ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் கலைக்கப்பட்டன. இதனால், முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம் ஒருங்கிணைப்பாளர் பதவியை இழந்த தாக அறிவிக்கப்பட்டது.

இதை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் பன்னீர்செல்வம் மனு தாக்கல் செய்தார். மனுவை விசாரித்த நீதிபதி, "பொதுக்குழு செல்லாது" என உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து பழனிசாமி தரப்பு உயர் நீதிமன்றத்தில் மேல்முறை யீடு செய்தது. இந்த மனுவை விசாரித்த இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வு, "பொதுக்குழு கூட்டம் செல்லும்" எனக் கூறி, பழனிசாமிக்கு ஆதரவாக உத்தர விட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து, பன்னீர் செல்வம் தரப்பு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. இந்த மனுவை, உச்ச நீதிமன்ற நீதிபதி தினேஷ் மகேஸ்வரி தலைமையிலான அமர்வு தொடர்ந்து ஐந்து நாட்கள் விசாரித்து, தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் சமீபத்தில் ஒத்திவைத்தது.

இந்த நேரத்தில், "ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதிக்கான இடைத் தேர்தல் பெப்ரவரி 27ல் நடத்தப்படும்" என, தேர்தல் ஆணையம் அறிவித்தது. "இதற்கான வேட்பு மனு தாக்கல் ஜனவரி 31ல் தொடங்குகிறது. வேட்பு மனு தாக்கலுக்கு பெப்ரவரி 7 கடைசி நாள்" என, தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இந்த தேர்தலில் அ.தி.மு.க., வேட் பாளரை நிறுத்த கூட்டணி கட்சிகளுடன் கலந்து பேசி முடிவெடுக்கப்பட்டது. இதையடுத்து வேட்பாளர் தேர்வில் அக்கட்சியின் இடைக்கால பொதுச்செய லர் பழனிசாமி ஈடுபட்டார். அந்த நேரத்தில், சற்றும் எதிர்பாராத வெடி குண்டை தேர்தல் ஆணையம் வீசியது.

"பழனிசாமியை இடைக்கால பொதுச் செயலராக தேர்ந்தெடுத்த பொதுக்குழு கூட்டம் தொடர்பான வழக்கில் இன்னும் தீர்ப்பு வெளியாகாத நிலையில், அக்கட்சி வேட்பாளரின் வேட்பு மனுவில் பழனிசாமி கையொப்ப மிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது" என, தேர்தல் ஆணையம் அறிவித்தது. இது, அ.தி.மு.க., வேட்பாளர் அறிவிப் பில் பின்னடைவை ஏற்படுத்தியது.



இந்த அறிவிப்பை எதிர்த்து பழனி சாமி தரப்பு வழக்கறிஞர்கள் சி.ஏ.சுந்தரம் மற்றும் பாலாஜி ஸ்ரீனிவாசன் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் கடந்த வெள்ளி யன்று மனு தாக்கல் செய்தனர். அதன் விபரம்:

பழனிசாமியின் கையெழுத்தை ஏற்க தேர்தல் ஆணையம் மறுத்துள்ளதால், ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் அ. தி.மு.க., போட்டியிடுவதற்கான வாய்ப்பு கேள்விக்குறியாகி உள்ளது. பொதுக்குழு கூட்டம் தொடர்பான வழக்கின் தீர்ப்பு நிலுவையில் இருப்பதால் தேர்தல் ஆணையத்தால் முடிவு எடுக்க முடியாத நிலை உள்ளது.

எனவே, அ.தி.மு.க., வேட்பாளரின் வேட்பு மனுவில் பழனிசாமி கையெழுத் திடுவதை ஏற்றுக் கொள்ள தேர்தல் ஆணையத்துக்கு இந்த நீதிமன்றம் உத் தரவிட வேண்டும். அல்லது பொதுக் குழு வழக்கில் இடைக்கால நிவா ரணம் வழங்க வேண்டும்.

இல்லையெனில், அ.தி.மு.க., எனும் மாபெரும் கட்சிக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பையும், பிரச்னைகளையும் இது உருவாக்கி விடும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனு, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையி லான அமர்வு முன் வெள்ளியன்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு: வேட்பு மனு தாக்கலின் கடைசி நாளான பெப்ர வரி 7ம் திகதிக்கு முன், பொதுக்குழு வழக்கில் தீர்ப்பு வழங்க முயற்சிக்கி றோம். ஒருவேளை தீர்ப்பு தள்ளிப் போனால், இடைக்கால நிவாரணம் அளிப்பது குறித்து முடிவு செய்யப்படும். இதை அவசர வழக்காக விசாரிக்க கோரி இன்று முறையான கோரிக்கையை நீதிமன்றத்தில் வைக்கவும். இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இதை தொடர்ந்து, இடைத்தேர்தல் வேட்பாளர் அறிவிப்பில் அ.தி.மு.க.,வில் நிலவி வரும் குழப்பம் இன்று தீருமா என, தொண்டர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

கல்வி tv CHANNEL-1

**30.01.2023**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**30.01.2023**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# நாளை சஜித் அம்பாறைக்கு!

## தேர்தல் பிரசார கூட்டம் ஆரம்பம்

அம்பாறை, ஜன. 30

**ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச நாளை செவ்வாய்க்கிழமை அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு தேர்தல் பிரசார விஜயத்தை மேற்கொண்டு வருகை தருகின்றார்.**

அதனையொட்டி "தீர்வற்ற நாட்டுக்கு தீர்வு"என்ற மகுடத்தின் கீழ் "மாற்றத்திற்கான முதல் சந்திப்பு திருக்கோவிலில் "என்று குறிப்பிடப்பட்ட பதாகைகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் வெள்ளையன் வினோகாந்தின் அழைப்பு ஏற்று அவர் நாளை காலை 9:00 மணிக்கு பொத்துவில் கோமாரி பிரதேசத்தில் தமிழ் வேட்பாளர் மற்றும் ஆதரவாளர்கள் மக்கள் சந்திப்பை நடத்துகின்றார்.

அதனைத் தொடர்ந்து திருக்கோவில் பிரதேசத்திற்கான பிரமாண்டமான தேர்தல் பிரச்சார கூட்டம் முதன் முதலாக தம்பிலுவிலில் காலை 10 மணியளவில் அமைப்பாளர் வெள்ளையன் வினோகாந்த் தலைமையில் நடைபெற இருக்கின்றது.

பின்னர் 11 மணியளவில் அக்கரைப்பற்றில் முஸ்லிம் மக்களை சந்தித்து கலந்துரையாட இருக்கிறார்.

பிற்பகல் 2 மணி அளவில் அம்பாறை நகர சபை மண்டபத்தில் சிங்கள மக்களை சந்தித்து கலந்துரையாடுகின்றார்.

மாலை நான்கு மணியளவில் சம்மாந்துறையில் முஸ்லிம் மக்களை சந்தித்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுகின்றார்.

மாலை ஐந்து மணி அளவில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு தொகுதியில் தமிழ் மக்களை சந்தித்து அங்கு பிரசாரக் கூட்டம் ஒன்று இடம்பெற இருக்கின்றது. (அ)

# மிளகாய் பயிரிடும் விவசாயிகளுக்கு உலக வங்கி அனுசரணையில் உதவி



உலக வங்கி நிதி அனுசரணையில் திருக்கோவில் மற்றும் பொத்துவில் பிரதேசத்தில் மிளகாய் பயிரிடும் விவசாயிகளுக்கு பலகோடி ரூபாய் பெறுமதியான உதவித்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விவசாய அமைச்சினால் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் ஊடாக உலகவங்கியின் நிதி பங்களிப்புடன், நவீன விவசாய மயமாக்கலின் கீழ் திருக்கோவில் மற்றும் பொத்துவில் பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 300 பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு விவசாயிக்கும் 16 லட்சம் ரூபாய் பெறுமதியான விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன், பொத்துவில் பிரதேச செயலாளர் எம் ஐ .பிர்னாஷ், விவசாய திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திசாநாயக்க, உதவிப் பணிப்பாளர் எஸ் பரமேஸ்வரன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டு அவற்றை வழங்கினர்.

இத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 100 விவசாயிகளுக்கு மிளகாய் பயிர்ச்செய்கைக்கான உழவு இயந்திர பாகங்கள், உபகரணங்கள், உள்ளீடுகள் வரை வழங்கப்பட்டன.

மொத்தமாக திட்டத்தின் கீழ் 300 விவசாயிகளுக்கு இவை வழங்கப்பட உள்ளன. அதில் 150 விவசாயிகள் கோமாரி பிரதேசத்தில் இருந்தும், மீதி 150 விவசாயிகள் தங்கவேலாயுதபுரம் கிராமத்தில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ)



# ஆலங்குளம் ஆலயத்தில் பொங்கல் விழா!

அம்பாறை, ஜன. 30

அம்பாறை மாவட்டத்தில் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் சிதைந்த பழமையான ஆலயமான ஆலங்குளம் சிவாலயத்தில் நேற்று முன் தினம் பொங்கல் விழா இடம்பெற்றது.

கொட்டும் மழைக்கு மத்தியில் சமய ஆர்வலர்கள் ஒன்று கூடி இவ் விழாவை சிறப்பாக செய்தனர்.

சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஆலங்குளம் ஆலயத்திற்கான நிர்வாகிகளுடன் இணைந்து நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட இந்து கலாசார உத்தியோகஸ்தர் கு. ஜெயராஜ் மற்றும் அனைத்து ஆலயங்களின் தலைவர் கு.வடிவேல் சமய ஆர்வலர்கள் ஆலய நிர்வாகிகள் சிவில் செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந் நிகழ்வில் தமிழர் பாரம்பரிய கலையான சிலம்பம் யோகாசனம் போன்ற வற்றை வளவாளர் குமாரதாசன் நிகழ்த்தியதோடு வளத்தாப்பிட்டி சத்திய சாயிசேவா நிலையத்தினரின் பஜனையும் இடம்பெற்றது. (அ)

# சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் செயற்பாடுகளை மேம்படுத்த நடவடிக்கை



அம்பாறை, ஜன. 30

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி மருந்து பொதி செய்யும் உறைகள் அன்பளிப்புச் செய்யும் நிகழ்வு கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது.

வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க நாபீர் பௌண்டேஸன் தலைவரும் ஈ.சி.எம். குறூப் நிறுவன தவிசாளருமான கலாநிதி.நாபீர் குறித்த அன்பளிப்பை வழங்கினார்.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியர். ஏ.எல். எம்.அஜ்வத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வைத்திய அதிகாரிகளான டாக்டர் எம் எச் கே சனூஸ், டாக்டர் திருமதி எம் ஏ கே சனூஸ், டாக்டர் திருமதி .எஸ் .ஜே. ஜஹான் அபிவிருத்திச் சங்க செயலாளர் எம்.ஐ.எம். சதாத் உட்பட அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் நாபீர் பௌண்டேஸன் நிருவாகிகளும் கலந்து கொண்டனர்.

மேலும் சாய்ந்தமருது அல் அக்ஸா பள்ளிவாசல் புனரமைப்பிற்கான 1 இலட்சம் ரூபா காசோலையும் இதன் போது நாபீர் பவுண்டேசன் தலைவரும் ஈ.சி.எம். குறூப் நிறுவன தவிசாளருமான கலாநிதி. நாபீரினால் பள்ளிவாசல் நிர்வாகத்திடம் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# ஐஸ் போதைப்பொருளைப் பாவிப்போர் குறுகிய காலத்துக்குள் மரணிக்கும் நிலை

## வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கூறுகிறார்

மட்டக்களப்பு, ஜன. 30

ஐஸ் போதைப்பொருளை பாவிக்கக் கூடியவர்கள் மிகக் குறுகிய காலத்துக்குள் மரணித்துப் போகக்கூடிய ஒரு மோசமான நிலை காணப்படுகிறது என்று வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.டி.டி.நிலங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது அதிகளவிலான பெண்களும் ஐஸ் போதைப்பொருட்களை பயன்படுத்துபவர்களாக இருக்கின்றனர். இதனை நாம் மிக விரைவாக இல்லாமலாக்குவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும்.

பெண்கள் அதிகம் வீட்டுக்குள் இருப்பதினால் அவர்கள் எங்கே சென்று பயன்படுத்துகிறார்கள் என்று தேடித்திரிய தேவையில்லை. வீட்டுக்குள் இருந்தே அவர்களை அவதானித்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

உங்கள் பாடசாலை சிறார்களிடத்தில் ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் பதார்த்தங்களினால் செய்யப்படுகின்ற லொலிபொப், மாத்திரைகள் வடிவிலான போதைப் பொருட்களை இவர்கள் வழங்கி விடலாம். இதனால் கட்டாயமாக உங்களது பிள்ளைகள் விடயத்தில் அவதானமாக இருந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறான போதைப்பொருள் தடுப்பு வேலைகளை நீங்கள் கடந்த காலத்தில் இருந்தே ஆரம்பித்து இருக்கவேண்டும்.

இப்போதாவது நீங்கள் ஆரம்பித்து இருப்பது நிச்சயமாக உங்களுடைய எதிர்கால குழந்தைகளை அது பாதுகாக்கும்.

இந்த போதைப்பொருள் பழக்கத்தில் இருந்து உங்களது சமூகத்தை பாதுகாத்து, போதைப்பொருள் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க நாங்கள் முழுமையான பங்களிப்பை வழங்குவோம்-என்றார். (அ)




# டென்மார்க் மசூதி முன்பாக எரியூட்டப்பட்டது குர் ஆன்!

கோபன்ஹேகன், ஜன. 30

இஸ்லாமிய எதிர்ப்பு ஆர்வலர் ஒருவர் கோபன் ஹேகன் மசூதிக்கு அருகிலும், டென்மார்க்கில் உள்ள துருக்கிய தூதரகத்துக்கு வெளியேயும் முஸ்லிம்களின் புனித நூலின் பிரதிகளை எரித்துள்ளார்.

டேனிஷ் மற்றும் சுவீடிஷ் குடியுரிமை பெற்ற தீவிர வலதுசாரி செயற்பாட்டாளரான ராஸ்மஸ் பலுடன், ஏற்கனவே ஜனவரி 21ஆம் திகதி ஸ்வீடனில் குர் ஆன் எரிப்பு போராட்டத்தை நடத்தி துருக்கி அரசாங்கத்தை கோபப்படுத்தியிருந்தார்.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை அவர் ஒரு மசூதியின் முன்பும், கோபன்ஹேகனில் உள்ள துருக்கிய தூதரகத்தின் முன்பும் முஸ்லிம்களின் புனித நூலான குர் ஆனை எரித்தார்.

மேலும், சுவீடன் நேட்டோவில் அனுமதிக்கப்படும் வரை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தொடருவதாக உறுதியளித்தார்.

இச்சம்பவத்தை தொடர்ந்து டென்மார்க் தூதர் துருக் கிய வெளியுறவு அமைச்சுக்கு வரவழைக்கப்பட்டார்.

அங்கு துருக்கிய அதிகாரிகள் இந்த ஆத்திரமூட்டும் செயலுக்கு வழங்கப்பட்ட அனுமதியை வன்மையாகக் கண்டித்துள்ளனர், இது ஒரு வெறுப்புக் குற்றத்தை தெளிவாகக் கொண்டுள்ளது’ என கூறினர்.

தூதரிடம், டென்மார்க்கின் அணுகுமுறை ஏற்றுக் கொள்ள முடியாதது என்றும், அனுமதி ரத்து செய்யப் படும் என்று துருக்கி எதிர்பார்க்கிறது என்றும் கூறப்பட் டது. துருக்கியின் வெளியுறவு அமைச்சு பின்னர் பலு டானை இஸ்லாத்தை வெறுப்பவர் என்று ஒரு அறிக் கையை வெளியிட்டது. அவர் ஆர்ப்பாட்டத்தை நடத்த அனுமதிக்கப்பட்டதற்கு வருத்தம் தெரிவித்தது.

ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமித்த பிறகு சுவீடன், பின்லாந்துடன் சேர்ந்து நேட்டோவில் சேர விண்ணப் பித்தது. ஆனால் ஏற்கனவே உறுப்பினராக இருக்கும் துருக்கி அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். எனினும், சமீபத்திய எதிர்ப்புகள் பதற்றத்தை அதிகரித்துள்ளன.

அதற்கு முன்பே, குர்திஷ் ஆயுதக் குழுக்கள், ஆர்வலர் கள் மற்றும் பயங்கரவாதிகள் என்று கருதும் பிற குழுக் களை ஒடுக்க இரு நாடுகளுக்கும் துருக்கி அழுத்தம் கொடுத்தது. (அ)



# கிழக்கு ஜெருசலேமில் 7 பேர் சுட்டுக் கொலை!

ஜெருசலேம், ஜன. 30

கிழக்கு ஜெருசலேமில் உள்ள ஒரு ஜெப ஆலயத்தில் ஏழு பேர் சுட்டுக் கொல்லப்பட்டதோடு, மூன்று பேர் காயமடைந்தனர். உள்ளூர் நேரப்படி நேற்று முன் தினம் இரவு 8:15 மணிக்கு நகரின் நெவ் யாகோவ் சுற்றுப்புறத் தில் இந்த சம்பவம் நடந்தது.

தாக்குதல் நடத்தியவரை பயங்கரவாதி என்று பொலிஸார் விபரித்தனர். உள்ளூர் ஊடகங்கள் அவரை கிழக்கு ஜெருசலேமைச் சேர்ந்த பலஸ்தீனியர் என அடையாளம் கண்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த இஸ்ரேலிய பொலிஸ் ஆணையாளர் கோபி ஷப்தாய், ‘சமீபத்திய ஆண்டுகளில் நாங்கள் சந்தித்த மிக மோசமான தாக்கு தல்களில் இதுவும் ஒன்று’ என்று கூறினார்.

யூதக் குடியேற்றத்தில் உள்ள ஒரு ஜெப ஆலயத்தில் பிரார்த்தனைக்காக இஸ்ரேலிய வழிபாட்டாளர்கள் கூடிய போது இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிதாரி சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் துப் பாக்கிதாரி ஓட்டியதாகத் தோன்றும் வெள்ளை நிற கார் குறித்து தடயவியல் குழு விசாரணை நடத்தி வருவதாக வும் கூறப்பட்டுள்ளது. (அ)

# கிழக்கு உக்ரைனில் மருத்துவமனை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 14 பேர் பலி!

## வேண்டுமென்றே தாக்குதல் என ரஷ்யா குற்றச்சாட்டு



மொஸ்கோ, ஜன. 30

**கிழக்கு உக்ரைனில் ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் உள்ள மருத்துவமனை மீது உக்ரைன் இராணுவம் வேண்டுமென்றே தாக்குதல் நடத் தியதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.**

குறித்த தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டதோடு 24 நோயாளிகள் மற்றும் மருத்துவ ஊழியர்கள் காய மடைந்தனர் என்றும் அறிவித்துள்ளது.

சனிக்கிழமை நடந்த இந்த தாக்குதல் குறித்த ரஷ்யா வின் குற்றச்சாட்டுகளுக்கு உக்ரைனில் இருந்து எந்த பதிலும் இதுவரை வெளியாகவில்லை.

இதேநேரம் இந்தத் தாக்குதல், அமெரிக்கா வழங்கிய ஹிமார்ஸ் ரொக்கெட் ஏவுதளத்தைப் பயன்படுத்தி நடத் தப்பட்டது என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித் துள்ளது.

குறித்த தக்குதல் உக்ரைன் அரசாங்கத்தின் கடுமையான போர்க்குற்றம் என்றும் இதற்கு அனைவரும் பொறுப்புக் கூறவேண்டும் என்றும் ரஷ்யா தெரிவித்துள்ளது. (அ)

# குடியுரிமைப் பிரச்னை காரணமாக நேபாள துணை பிரதமர் இராஜிநாமா

காத்மண்டு, ஜன. 30

நேபாள துணை பிரதமரும் உள்துறை அமைச்சரு மான ரபி லமிசேன் தனது அனைத்து பதவிகளையும் இராஜிநாமா செய்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தலில் சமர்ப்பித்த குடியுரிமை சான்றிதழ் செல்லுபடியற்றது என உச்ச நீதிமன்றம் உத் தரவிட்டதைத் தொடர்ந்து, நேபாள துணை பிரதமரும் உள்துறை அமைச்சருமான ரபி லமிசேன் தனது அனைத்து பதவிகளையும் இராஜிநாமா செய்துள்ளார்.

அமெரிக்க குடியுரிமை பெற்று அங்கேயே பல ஆண்டுகளாக வசித்து வந்த ரபி லமிசேன், கடந்த 2014 ஆம் ஆண்டு தனது சொந்த நாடான நேபாளத்திற்கு திரும்பினார். பின்னர், ராஷ்ட்ரீய சுதந்திரக் கட்சியைத் தொடங்கினார். கடந்த ஆண்டு நடைபெற்ற பாராளு மன்ற தேர்தலில் அந்தக் கட்சி 20 இடங்களில் வெற்றி பெற்று, நான்காவது பெரிய கட்சியாக உருவெடுத்தது.

மாவோயிஸ்ட் மைய கட்சியை சேர்ந்த புஸ்பா கமல் டால் நேபாளத்தின் புதிய பிரதமராக பதவியேற்றார். இதன்போது, ரபி லமிசேன் துணை பிரதமராகவும் உள் துறை அமைச்சராகவும் பதவியேற்றார்.

முன்னதாக, அவர் 2018-இல் தனது அமெரிக்க குடி யுரிமையை கைவிட்டார். ஆனால், அதன் பிறகு நேபாள குடியுரிமையை பெறுவதற்கு அவர் விண்ணப்பிக்கவில்லை.



இந்த நிலையில், நேபாள குடியுரிமையை முறைப்படி பெறாமல் தேர்தலில் போட்டியிட்டு, நாட்டின் துணை பிரதமர் ஆனதை எதிர்த்து நேபாள உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், ‘அமெரிக்க குடியுரிமையைக் கைவிட்ட பிறகு, நேபாள குடியுரிமை சான்றிதழைப் பெறுவதற்கான நடைமுறைகளை ரபி லமிசேன் மேற்கொள்ளவில்லை. அதனால், நேபாள பிரதிநிதிகள் சபைக்கான தேர்தலில் வேட்பாளராக ரபி லமிசேன் போட்டியிட முடியாது என்பதோடு, அந்தப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படவும் முடியாது’ என்று தீர்ப் பளித்தது. (அ)

# உக்ரைனுக்கு அமெரிக்கா போர் டாங்கிகள் அனுப்பியமைக்கு வடகொரியா கண்டனம்

பியொங்யாங், ஜன. 30

ரஷ்யப் படைகளை எதிர்த்துப் போரிட உதவும் வகையில் போர் டாங்கிகளை உக்ரைனுக்கு வழங் கும் அமெரிக்காவின் முடிவை வடகொரியா கண்டித்துள்ளது.

மொஸ்கோவை அழிக்க வடி வமைக்கப்பட்ட “ப்ரொக்ஸி போரை” அமெரிக்கா தீவிரப் படுத்தி உள்ளதாக வட கொரியத் தலைவர் கிம் ஜொங் உன்னின் சகோதரி குற்றம் சாட்டியுள்ளார்.



உக்ரைனுக்கு இராணுவ தளவாட வசதிகளை வழங்குவதன் மூலம் அமெரிக்கா போர் நிலைமையை அதிகரிப்பது குறித்து தீவிர கவலை வெளியிட்டுள்ளார்.

ரஷ்யாவின் பாதுகாப்புக்கு கடு மையான அச்சுறுத்தலையும் சவா லையும் முன்வைத்து, சூழ்நிலையை மேலும் மோசமாக்க அமெரிக்கா முயற்சிப்பதாக குற்றம் சாட்டியுள் ளார்.

கிம் யோ ஜொங்கின் இந்த கருத் துக்கள், உக்ரைனுடனான போரில் ரஷ்யாவுடன் வட கொரியாவின் ஆழமான ஒத்துழைப்பை அடிக் கோடிட்டுக் காட்டியுள்ளது. (அ)




# தென்னாபிரிக்கா சிறப்பான வெற்றி!

இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் போட்டியில், தென்னாபிரிக்கா அணி 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ப்ளூம்போன்டைன் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னா பிரிக்கா அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 298 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, வெண்டர் டுஸன் 111 ஓட்டங்களையும் டேவிட் மில்லர் 53 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்துக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், சேம் கர்ரன் 3 விக்கெட்டுகளையும் ஜெப்ரா ஆர்செர், மொயின் அலி, அடில் ராஷித் மற்றும் ஹொலி ஸ்டோன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 299 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து அணி, 44.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 271 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், தென்னாபிரிக்கா அணி 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஜேஸன் ரோய் 113 ஓட்டங்களையும் டாவிட் மாலன் 59 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

தென்னாபிரிக்கா அணியின் பந்துவீச்சில், ஹென்ரிச் நோட்ஜே 4 விக்கெட்டுகளையும் மகாலா 3 விக்கெட்டு களையும் கார்கிஸோ ரபாடா 2 விக்கெட்டுகளையும் சம்ஸி 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, தென்னா பிரிக்கா அணியின் பந்துவீச்சாளர் சிசன்டா மகாலா தெரிவு செய்யப்பட்டார். (அ)

# இலங்கை கிரிக்கெட் ரசிகர் கயான் விராட் கோலியை சந்தித்தார்



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் விராட் கோலி இலங்கை கிரிக்கெட் அணி யின் தீவிர ரசிகரான கயான் சேனா நாயக்கவை சந்தித்துள்ளார்.

முன்னதாக கடந்த ஒகஸ்ட் மாதம் கயான் சேனாநாயக்க விராட் கோலி மற்றும் ரோஹித் சர்மாவை சந்தித் திருந்தார்.

இந்தநிலையில், அவர் மீண்டும் இந்திய அணியின் நட்சத்திர துடுப் பாட்ட வீரர் விராட் கோலியை சந்தித்துள்ளார்.

இந்திய அணி நியூஸிலாந்து அணியுடனான ஒருநாள் கிரிக்கெட் தொடரை வென்றுள்ளது. 3 போட்டி களை கொண்ட இந்தத் தொடரை இந்திய அணி 3 - 0 என்ற அடிப்ப டையில் வெற்றி பெற்றுள்ளது. (அ)

# தோனி வழங்கிய அறிவுரை




ஆப்கானிஸ்தான் அணிக்காக 82 ஒருநாள், 86 ரி-20 போட்டிகளில் ஆடியுள்ள இளம் வீரரான நஜிபுல்லா ஜட்ரான் தோனி எனக்கு வழங்கிய அறிவுரையை நான் இன்றும் கடைபிடித்து வருகிறேன் என தோனிக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

தற்போது சர்வதேச லீக் ரி20 தொடரில் மும்பை எமிரேட்ஸ் அணிக்காக ஆடி வரும் அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:

தோனியை எனது ரோல் மொடலாக கருதுகிறேன். அவர் ஒரு இன்னிங்சை முடிப்பது போல் யாராலும் முடிக்க முடியாது. அவரிடம் இருந்து நான் கற்றுக்கொண்டேன். 2015 உலகக் கிண்ண தொடரின் போது அவரிடம் நான் பேசும்போது, அவர் என்னை அமைதியாக இருங்கள், அதிக அழுத்தம் நிறைந்த சூழ்நிலை களில் கூட உங்களை நீங்கள் நம்புங்கள் என்றார். நான் இன்னும் அந்த அறிவுரையை நம்புகிறேன் மற்றும் பின்பற்றுகிறேன்-இவ்வாறு அவர் கூறினார்.

# நியூஸிலாந்து அபாரம்!

இந்தியக் கிரிக்கெட் அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் போட்டியில், நியூஸிலாந்து அணி 21 ஓட்டங் கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ரஞ்சி மைதானத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக் கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சி யில் வெற்றிபெற்ற இந்தியக் கிரிக்கெட் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக் கெட்டுகள் இழப்புக்கு 176 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, டேரில் மிட்செல் ஆட்டமிழக்காது 59 ஓட்டங்களையும் கோன்வே 52 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், வொ ஷிங்டன் சுந்தர் 2 விக்கெட்டுகளையும் ஹர்ஸ்தீப் சிங், குல்தீப் யாதவ், சிவம் மாவி ஆகியோர் தலா 1 விக்கெட் டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 177 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இந்தியக் கிரிக்கெட்




அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 155 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், நியூஸிலாந்து அணி 21 ஓட்டங்கள் வித்தியா சத்தில் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, வொஷிங்டன் சுந்தர் 50 ஓட்டங்களையும் சூர்யகுமார் யாதவ் 47 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், மைக்கேல் பிரேஸ்வெல், மிட்செல் சான்ட்னர் மற்றும் லொக்கி பெர்குசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை யும் டப்ஃபி மற்றும் இஷ் சோதி ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 30 பந்துகளில் 5 சிக்ஸர்கள் 3 பவுண்ரிகள் அடங்கலாக, ஆட்டமிழக்காது 59 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட டேரில் மிட்செல் தெரிவு செய்யப்பட்டார். (அ)

# மகுடம் சூடினார் அரினா



ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடரின், பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் வெற்றிபெற்று பெலராஸின் அரினா சபலெங்கா சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

நேற்று முன் தினம் சனிக்கிழமை நடைபெற்ற சம்பி யன் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியில், பெலரா ஸின் அரினா சபலெங்கா, கஸகஸ்தானின் எலெனா ரைபகினாவுடன் பலப்பரீட்சை நடத்தினார்.

பெரும் எதிர்பார்ப்பு மிக்க இப்போட்டியில், பெலராஸின் அரினா சபலெங்கா, 4-6, 6-3, 6-3 என்ற செட் கணக்குகளில் வெற்றி பெற்று சம்பியன் பட் டத்தை வென்றார்.

இந்த வெற்றியின் மூலம் அரினா சபலெங்கா தனது முதல் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற பட்டத்தை வென்றார்.

ஈழநாடு



# நாணய நிதியத்தின் நிபந்தனைகளுடன் வேறுபடுகிறது சீன கடன் மறுசீரமைப்பு!

## ஹிந்துஸ்தான் ரைம்ஸ் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 30

**இலங்கையின் கடன்கள் தொடர்பில் சீனா இணங்கியுள்ள 2 வருடத் தடைக்காலம் சர்வதேச நாணய நிதியம், இலங்கைக்கு விதித்துள்ள நிபந்தனைகளுடன் வேறுபடுவதாக ஹிந்துஸ்தான் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.**

10 வருட கடன் தடைக்காலம் மற்றும் 15 வருட மறுசீரமைப்பு காலத்துடன் இலங்கையின், சர்வதேச நாணய நிதியக் கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வுக்கு ஆதரவளிக்க, இந்தியா முடிவு செய்துள்ளது.

எனினும் சீனாவின் அரச வங்கிகள் 2 வருட கடன் தடையை மட்டுமே வழங்கத் தயாராக உள்ளன. இது இலங்கைக்கு மேலும் பொருளாதார வலியை ஏற்படுத்தலாம் என்று ஹிந்துஸ்தான் ரைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையும் பாகிஸ்தானும் கடந்த தசாப்தத்தில் சீனாவின் பெல்ட் ரோட் முன்முயற்சியின் முக்கிய நாடுகளாக இருந்தன.

அத்துடன் தமது நாடுகளில் வெள்ளை யானை திட்டங்களை உருவாக்க பீஜிங்கில் இருந்து அதிக வட்டி கடன்களைப் பெற்றுக்கொண்டன.

எனினும் அதிகரித்து வரும் உணவு மற்றும் எரிபொருள் நெருக்கடியை சமாளிக்க மிகவும் தேவையான உதவிகளுடன் தங்கள் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதில் சீனா உற்சாகத்தை காட்டாமைக் காரணமாக, இலங்கையும், பாகிஸ்தானும் இன்று திவாலாகிவிட்டன.

இந்த இரண்டு நாடுகளின் பொருளாதார நெருக்கடி நேபாளம், பங்களாதேஷ், மாலைதீவுகள் மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளுக்கு ஒரு பாடமாகவும் அமைந்துள்ளது என்றும் ஹிந்துஸ்தான் ரைம்ஸ் குறிப்பிட்டுள்ளது. (அ)

# ஆறாயிரம் தொழில் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேற்றம்!

கொழும்பு, ஜன. 30

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், விரிவுரையாளர்கள் என கடந்த மூன்று வருடங்களில் 6,000 க்கும் மேற்பட்டவர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தெரிவித்தார்.

சம்பளத்திற்கு அதிக வரி விதிக்கப்படுவதால் எதிர்வரும் காலங்களில் பெருமளவிலான தொழில் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறும் அபாயம் காணப்படுவதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை, கடந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களில் ஏறக்குறைய 8 இலட்சம் பேர் கடவுச்சீட்டு பெற்றுள்ளனர் எனவும், சுமார் 6 இலட்சம் பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் எனவும் காமினி வலேபொட தெரிவித்தார்.

கடந்த வருடம் 300,000 இற்கும் அதிகமானோர் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு கல்வி கற்கச் சென்றுள்ளனர் எனவும், இதனால் நாட்டுக்கு பாரிய தொகை இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆகவே இதனை தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட கேட்டுக்கொண்டார். (அ)

# தொழுநோயாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 30

இலங்கையில் தொழுநோயாளிகளில் 10 வீதமானோர் சிறுவர்கள் என கண்டறியப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சந்தன கஜநாயக்க தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை உலக தொழுநோய் தினத்தை முன்னிட்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு கூறினார். இதன்படி இலங்கையில் வருடாந்தம் சுமார் 2,000 தொழுநோயாளிகள் பதிவாகுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் தொழு நோய் ஏற்பட்ட ஒருவரின் உடலில் நீண்ட காலமான வெள்ளை அடையாளம் மட்டும் காணப்படுவதால் அதனை அவர்கள் நோயாக கருதி செயற்படுவதில்லை எனவும் வைத்திய நிபுணர் குறிப்பிட்டார்.

# ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்ட கொலை மிரட்டல் குறித்து பொலிஸ் விசாரணை

கொழும்பு, ஜன. 30

தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்ட கொலை மிரட்டலுடன் தொடர்புடைய தொலைபேசி இலக்கம் குறித்து விசாரணை நடத்த பொலிஸார் நீதிமன்ற உத்தரவைப் பெற்றுள்ளனர்.

ஆணைக்குழு உறுப்பினர்கள் எஸ்.பி. திவாரட்ன மற்றும் கே.பி.பி. பத்திரன ஆகியோர் முன்வைத்த முறைப்பாடுகளுக்கு அமையவே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவிக்கையில், அவர்களின் தொலைபேசி பகுப்பாய்வு அறிக்கைகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் குறிப்பிட்டார். (அ)

# பெப். 8 கொள்கை அறிக்கையை வெளியிடவுள்ளார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 30

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது அமர்வை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்க உள்ளார்.

அரசமைப்புச் சட்டத்தின் படி அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையை முன்வைப்பார்.

ஜனவரி 27ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து, கோப் குழு மற்றும் கோபா குழு உள்ளிட்ட 50 க்கும் மேற்பட்ட குழுக்களின் செயல்பாடுகள் நிறுத்தப்பட்டன.

அத்தகைய குழுக்களுக்கான உறுப்பினர்கள் அடுத்த மாதம் பாராளுமன்றத்தால் மீண்டும் நியமிக்கப்பட வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# 7,000 சுயாதீன கண்காணிப்பாளர்கள் தேர்தல் கடமையில் ஈடுபடுவார்கள்

கொழும்பு, ஜன. 30

உள்ளூராட்சித் தேர்தலை கண்காணிப்பதற்காக 7,000 சுயாதீன கண்காணிப்பாளர்களை கடமையில் ஈடுபடுத்தவுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவிக்கின்றன.

பவ்ரல் என்ற தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி, இதனை கூறினார்.

அடுத்த வாரம் முதல் மாவட்ட மட்டத்தில் தேர்தல் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, தேர்தலுக்கு முன்னரான மற்றும் தேர்தலுக்குப் பிந்தைய காலகட்டம் குறித்தும் கண்காணிப்பாளர்கள் அவதானம் செலுத்துவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# அரச வேலைத்திட்டங்களை சீர்குலைத்தால் நாடு மீண்டும் நெருக்கடிக்குள் தள்ளப்படும்

## ஜனாதிபதி ரணில் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 30

அரசாங்கத்தின் பொருளாதார வேலைத்திட்டம் எந்த வகையிலும் சீர்குலைக்கப்பட்டால், இலங்கை மீண்டும் நெருக்கடிக்குள் தள்ளப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் பொருளாதார மற்றும் விவசாயத் திட்டத்தையும், ஐ.எம்.எப். திட்டத்தின்படி மேற்கொள்ளப்பட்டு வரும் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறித்த திட்டங்கள் சீர்குலைந்தால், கடந்த ஆண்டு மே மற்றும் ஜூன் மாதத்தைப் போல் நாடு மீண்டும் நெருக்கடியில் விழுவதை யாராலும் தடுக்க முடியாது என அவர் குறிப்பிட்டார்.

2019ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 15 சதவீதமாக காணப்பட்டது. எனினும், அதன்பின்னர் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8.4 சதவீதமாக குறைவடைந்தது என அவர் கூறினார்.



குறித்த வருடங்களில் வழங்கப்பட்ட வரிச்சலுகை நாட்டின் பொருளாதர நெருக்கடிக்கு காரணமானது என்றும் 2024 இல் இருந்து பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து மீள முடியும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நம்பிக்கை வெளியிட்டார். (அ)

## தமிழ்...

மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

அண்மையில் இரண்டு கூட்டங்களிற்காக வடமராட்சி பிரதேசங்களிற்கு சென்றிருந்தோம். அங்குள்ள மக்கள் வீட்டு சின்னத்தை ஒரு சுயேச்சைக்குழு சின்னத்தை போல, நகைச்சுவையாகத்தான் பார்க்கிறார்கள். கடந்த பாராளுமன்ற தேர்தலில் அங்கு இலங்கை தமிழ் அரசு கட்சியை விட பல கட்சிகள் அதிக வாக்கு பெற்றிருந்தன. இப்படியான நிலைமையினால்தான் கடந்த தேர்தல்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு சறுக்கல் ஏற்பட்டது.

ஆனால் மாவை சேனாதிராசா போன்ற தலைவர்களால் வலி வடக்கு உள்ளிட்ட பகுதிகள், வன்னி, கிளிநொச்சி பகுதிகளிலேயே ஓரளவு அதிக வாக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்தது.

அப்படியான மாவை போன்ற தலைவர்கள் இன்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நடவடிக்கைகளினால் அதிருப்தியடைந்து ஒதுங்கியிருக்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்தமைக்கு, ரணிலின் பின்னணியில் இயங்கும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஒரு குழுதான் முழு காரணம். அவர்கள் 2010ஆம் ஆண்டு முதல் தமிழ் மக்களின் போராட்டத்தை சிதைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

35 வருடங்களாக ஆயுத வழியில் போராடி, ஆயுதப் போராளிகளை கதாநாயகர்களாக பார்த்த இனத்தில், 2010ஆம் ஆண்டிற்கு பின்னர் கொழும்பிலிருந்து வந்தவர்கள், நாங்கள் ஆயுதப் போராட்டத்தில் சம்பந்தமில்லாதவர்கள் என பெருமையாக பேசி, எமக்கு வாக்களியுங்கள் என கேட்கிறார்கள். இது மக்களை அவமதிக்கும் செயல். மாவீரர்களையும் போராளிகளையும் அவமதிக்கும் செயல்.

இந்த குழுவினர்தான் தமிழ் அரசுக் கட்சிக்குள் முக்கிய பொறுப்பிற்குள் வந்து, கட்சியையும், தமிழ் தேசிய கூட்டமைப்பையும் உடைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இந்த குழுவினர்தான், கடந்த பொதுத்தேர்தலில் மாவை சேனாதிராசாவை தோற்கடித்தவர்கள்.

இப்போது கட்சியை விட்டு ஒதுக்கியுள்ளனர். மாவை சேனாதிராசாவை தோற்கடித்தவர்களை, தற்போது தமிழ் அரசு கட்சியை விட்டு வெளியேற்ற முயற்சிப்பவர்களை மக்கள் தண்டிக்க வேண்டும்.

நாங்கள் அரசாங்கத்துடன் சில தடவைகள் பேச்சு நடத்தியுள்ளோம். தொடர்ந்து பேசுவோம். காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடயங்களில் சில முக்கியமான முயற்சிகளை எடுத்துள்ளோம். அரசியல் தீர்வுக்கான நெருக்கடி அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

இந்த முக்கியமான கட்டத்தில், தமிழ் தேசிய கூட்டமைப்பை உடைப்பதென இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஒரு தரப்பு முடிவெடுத்து, வெற்றியடைந்துள்ளது. தமிழ் மக்களிற்கு எதையும் செய்யாமல் தப்பிக்க, ரணில் அரசாங்கம்தான் பின்னணியில் இருந்து இதனை செயற்படுத்தியது.

இப்போது, சுதந்திர தினத்திற்கு எதிராக கறுப்பு க் கொடி போராட்டம் நடத்தப் போவதாக தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். இது போலி நாடகம்.

கடந்த முறை ரணில் அரசாங்கத்துடன் கூடிக்குலாவிக் கொண்டிருந்து, குடும்பத்துடன் சென்று சுதந்திரதின நிகழ்வுகளில் கலந்து கொண்டு, சிங்கக் கொடியை ஏந்திய தமிழரசுக்கட்சி தலைவர்கள், இப்பொழுது திடீரென ஞானம் வந்து, கருப்புக்கொடி போராட்டத்தை அறிவித்துள்ளனர். தேர்தல் வருவதே இந்த ஞானத்திற்கு காரணம்.

தமிழ் மக்கள் மத்தியில் கே.வி.தவராசா போன்ற நல்ல சட்டத்தரணிகள் இருக்கிறார்கள். அவர்கள் காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடயங்களிற்காக தொடர்ந்து பாடுபடுகிறார்கள்.

இன்னும் சில சட்டத்தரணிகள் பணத்திற்காக செயற்படுகிறார்கள். அவர்கள் தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் இருக்கிறார்கள். நல்லாட்சி காலத்தில் ரணில் அரசுடன் நெருக்கமாக இருந்து, கொழும்பு துறைமுக நகர ஒப்பந்த தயாரிப்பில் ஈடுபட்டு, பெருந்தொகை பணத்தை பெற்ற நமது சட்டத்தரணிகள் பற்றிய விவரங்களையும் நாங்கள் பகிரங்கப்படுத்துவோம்.

தமிழ் அரசுக் கட்சியின் பிரபல சட்டத்தரணியொருவர், ரணில் அரசுடன் வெளிப்படையாகவும், கோட்டா அரசில் மறைமுகமாகவும் டீல் பேசி நிறைய பணம் பெற்றிருந்தார். அவரை நெருக்கமாக கவனித்தீர்கள் என்றால், எப்பொழுதும் வலது கையை மேசைக்கு கீழே வைத்திருந்து பெருவிரல், சுட்டு விரல், நடுவிரலை உரசியபடியே இருப்பார். அது பணம் வாங்கி பழகிய பழக்க தோசம்- என்றார்.

## சாவகச்சேரி...

தார். மோட்டார் சைக்கிளில் வந்தவர், சமிக்ஞை செய்தவாறு வீதியின் மறுபக்கம் செல்ல முயன்ற போது, பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டது. நகைக்கடை உரிமையாளர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அவரது சடலம் தற்போது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்தை ஏற்படுத்திய வடமராட்சி பகுதி இளைஞன் சிறு காயங்களுடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். உயிரிழந்தவரின் உறவினர்கள் அவரை வைத்தியசாலைக்குள் வைத்து தாக்க முயன்றதையடுத்து, வைத்தியசாலையின் பின் பகுதியால் நோயாளர் காவு வண்டி மூலம் அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

## தமிழ் அரசியல்...

டுக் கொல்லப்பட்டார்.

இதேவேளை, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவைக் கொலை செய்ய முயன்ற குற்றத்திற்காகத் தண்டனை பெற்றவரும் கைதியும் விடுவிக்கப்படமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலாளியை விடுவிக்க விரும்புவதாக பொன்சேகா பாராளுமன்றத்தில் அறிவித்தபோதிலும், அவரது கையொப்பமிடப்பட்ட ஒப்புதல் பெறப்படவில்லை.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் இன்னும் அவரிடம் கலந்தாலோசிக்கவில்லை என பொன்சேகாவின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

## பொதுப்பயன்பாடு...

குழுவின் தலைவருக்கு எதிராக குற்றப்பத்திரம் ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த குற்றப்பத்திரம் எதிர்வரும் 8ஆம் திகதி பாராளுமன்றில் முன்வைக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

அவர், தன்னிச்சையான தமது தீர்மானங்களை எடுத்து வருகின்றார். தமது அரசியல் நோக்கங்களுக்காக, உயர் தர மாணவர்களது உரிமைகள் தொடர்பில் கருத்துரைப்பதாகவும் வலுசக்தி அமைச்சர் குற்றம் சுமத்தினார். (அ)

## வஜிர,...

வது:

பெப்ரவரி மாதத்தின் தொடக்க வாரத்தில் புதிய அமைச்சரவை பதவியேற்பு நிகழ்வு நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்துக்கு வருகை தந்த வஜிர அபேவர்தன மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் துமிந்த திசநாயக்க ஆகியோருக்கு இம்முறை அமைச்சரவைப் பதவிகள் கிடைக்குமென அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், அமைச்சரவை அமைச்சர்கள் பதவிகளைப் பெறும் குழுவின் பெயர்கள் அடங்கிய பட்டியல் இணைய ஊடகங்களில் பரிமாறப்படப்பட்டுள்ளன.

அந்தப் பட்டியலில் எஸ்.எம். சந்திரசேன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோகித அபேகுணவர்தன, மகிந்தானந்த அளுத்கமகே, எஸ்.பி. திசநாயக்க, சி.பி. ரத்நாயக்க ஆகியோரின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## '13' ஐ...

நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சமய நிகழ்வொன்றில் பங்கேற்று கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

நாரஹேன்பிட்டி அபயராம விகாரையின் தலைமை பிக்குவான வணக்கத்திற்குரிய முரத்தெட்டுவே ஆனந்த தேரரின் 80 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய வணக்கத்துக்குரிய இந்துராகரே தம்ம ரத்ன தேரர்,

13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் அதற்கு எதிராக நாளையே பிக்குகள் கிளர்ந்து எழ தயாராக உள்ளனர்.

எனவே, 13 ஆவது அரசமைப்பு சட்டத்தைப் பற்றி விவாதித்தால், அதனையும் வைத்து அரசியல் புரிகின்றோம் என்று எம்மை அழைத்தாலும் பரவாயில்லை. புத்தரின் போதனைகளைப் பாதுகாத்து சம்புத்த பாடசாலையைக் கொண்ட ஒரே நாடு சிறிலங்கா. ஆகவே, அதனை இரண்டு அல்லது மூன்று துண்டுகளாக உடைத்தால் எமது நாடு தாங்காது -என்றார். (அ)

## குற்றப்பத்திரத்...

எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்தார்.

இதற்கு ஆளும் கட்சியின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், ஜனக ரத்னாயக்கவுக்கு எதிராக குற்றப்பத்திரிக்கை ஒன்றை தயாரித்துள்ளதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

இந்த நிலையிலேயே குறித்த குற்றப்பத்திரிகை தொடர்பில் ஜனக ரத்னாயக்க தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் அமைச்சரவை அனுமதி வழங்கிய புதிய மின் கட்டண திருத்தம் தொடர்பில் சட்டமா அதிபரின் நிலைப்பாடு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

## நீதி அமைச்சர்...

அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட முடியும் என்பதை பட்டியலிட்டு ஆதாரத்தோடு ஜனாதிபதியிடம் கடந்த ஆவணி மாத சந்திப்பிலே நாங்கள் கையளித்திருந்தோம். அதன் பிரகாரம் 13 அரசியல் கைதிகள் வெளிவந்திருப்பது வரவேற்கத்தக்கது.

அதன் அடிப்படையில் மற்ற அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட முடியும் என்பதை அரசியல் யாப்பு தெளிவாக குறிப்பிட்டிருக்கிறது. வழக்கு நிலுவையில் இருப்பவர்கள் மாத்திரம் வழக்கை மீள பெற்ற பின்னர் விடுதலை செய்யப்பட முடியும் என்பதையும் சட்டம் சொல்கிறது.

இது இப்படி இருக்க சிறுபிள்ளைத்தனமான ஒரு புதுக் கதையை நீதி அமைச்சர் அளந்து இருப்பதானது அரசியல் கைதிகள் விடுதலையில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் பற்றிய சட்ட விவகாரங்களை அவர் அறிந்திருக்கவில்லையோ என்ற சந்தேகத்தை தோற்றுவிக்கிறது. இதுவரை காலமும் விடுதலை செய்யப்பட்ட அரசியல் கைதிகள் யாருடைய ஒப்புதலின் பேரில் அதுவும் எந்த தமிழ் அரசியல்வாதிகளின் ஒப்புதல் பேரில் விடுதலை செய்யப்பட்டார்கள் என்பதை அவர் விளக்குவாரா?

அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு முன்வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கைக்கு நாட்டின் நீதி அமைச்சர் என்ற முறையிலே விஜயதாச ராஜபக்ஷ வழங்கிய பதில் அந்தக் கோரிக்கையை எள்ளி நகையாடி இருப்பதாகவே நாங்கள் கருதுகிறோம். இதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

நீதி அமைச்சராக தன்னுடைய கடமையை சரியான முறையில் அவர் செயல்படுத்த வேண்டுமே தவிர சிறுபிள்ளைத்தனமான சாட்டுப்போக்குகளைச் சொல்லி தனது கடமைகளை தவிர்த்துக் கொள்வதை அல்லது சட்டத்திலே இருக்கக்கூடிய ஏற்பாடுகளை மூடி மறைப்பதை நாங்கள் கவலையோடு உற்று நோக்குகிறோம்.

அவருடைய இந்த கருத்தானது ஒட்டு மொத்த நாட்டினுடைய நீதிப் பொறிமுறையின் செயல்பாடு எந்த அளவிற்கு சிறுமைப் படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி உள்ளது-என்றார். (அ)

## கச்சதீவு...

திருவிழாக்களில் மொத்தம் 9,000 பேர் மட்டுமே பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள் என யாழ்ப்பாண மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 3,500 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள்.

முந்தைய ஆண்டுகளில் அங்கு வரும் அடியார்களுக்கு உணவு மற்றும் பிற குளிர்பானங்கள் வழங்கப்பட்ட நிலையில், பொருளாதார ஸ்திரமின்மை மற்றும் நிதி நெருக்கடி காரணமாக, இந்த ஆண்டு உணவு வழங்கப்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், புனித அந்தோனியார் ஆலயத்தில் பிரார்த்தனைக்காக வரும் பக்தர்கள் மற்றும் யாத்திரீகர்களுக்கு மார்ச் 4 ஆம் திகதியன்று காலை உணவு வழங்கப்படும்.

மார்ச் 3ஆம் திகதி கொடியேற்றத்திற்குப் பிறகு திருவிழா ஆரம்பமாகும்.

திருவிழாவின் நிறைவாக மார்ச் 4 ஆம் திகதி இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளிலிருந்து பங்கேற்கும் அருட்தந்தையர்களின் பங் நற்கருணை நடைபெறும்.

இதேவேளை இந்த தடவை, பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையை 8,000 ஆக மட்டுப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், யாத்திரிகர்கள் உணவு மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களுக்கான ஏற்பாடுகளை அவர்களே செய்ய வேண்டும் எனவும் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

ஆர்வமுள்ள புரவலர்கள் கச்சத்தீவு திருவிழாவிற்கு நன்கொடை வழங்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

## வலி. வடக்கில்...

யின் செயலாளர் நாயகமும் கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வலி வடக்கில் சுமார் 2 ஆயிரத்து 300 ஏக்கருக்கு மேற்பட்ட தனியார் காணிகள் பாதுகாப்பு தரப்பினரிடம் உள்ள நிலையில் அதன் ஒரு பகுதி காணிகளை பாதுகாப்பு தரப்பு இவ்வாறு கையளிக்கவுள்ளது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வுக்காக வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலி.வடகில் உள்ள தனியார் காணிகளை பகுதி பகுதியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்.

அதன்பின் யாழ்.மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதி செயலக அதிகாரிகள் மற்றும் மாவட்ட உயர் அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றது.

கலந்துரையாடலின் பின்னர் உயர் பாதுகாப்பு வலயக் காணிகள் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் தொடர்பில் ஜனாதிபதி செயலக அதிகாரிகள் கள விஜயத்திலும் ஈடுபட்டனர்.

இவ்வாறான நிலையில் எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னர் வலி வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள ஒரு பகுதி காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே வலி.வடக்குப் பகுதியில் உள்ள விவசாய காணிகள் மற்றும் பொதுமக்கள் குடியிருப்பு காணிகளை விடுவிப்பதற்கு அரசாங்கம் கரிசனையுடன் செயல்படுகிறது-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# ரத்னதேரரின் கருத்தை கேட்டால் அழிவீர்கள்!

## ரணிலை எச்சரித்தார் குமார வெல்கம

கொழும்பு, ஜன. 30

அத்துரலிய ரத்ன தேரரின் கருத்துக்களை கேட்டால் நீங்களும் அழிந்து போவீர்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம எச்சரித்துள்ளார் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியான அந்த ஊடகத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அனைத்து கட்சிக் கூட்டத்தில் நவ லங்கா சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்த கருத்து காரணமாக பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரருக்கும் இடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி அவர்களே, இந்த வணக்கத்துக்குரிய ரத்ன தேரர் தெரிவிக்கும் கருத்துக்களை ஏற்கவோ, கேட்கவோ வேண்டாம். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு விவசாயத்தை அழிக்குமாறு வணக்கத்துக்குரிய ரத்ன தேரர் மற்றும் பாதெனிய ஆகியோரால் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. எமது நாட்டில் விவசாயமும் அழிந்தது. அரசாங்கமும் அழிக்கப்பட்டது. எனவே இந்த துறவி தெரிவிக்கும் கருத்தை அதிகம் கவனிக்க வேண்டாம் என்று குமார வெல்கம தெரிவித்தார்.

இந்த கருத்தினை கேட்ட ரத்ன தேரரும் சற்று கோபத்துடன் உரையாற்றினார்.

அந்த குழுக்களில் நான் இருந்தது கூட இல்லை. நான் அறிவுரையும் தெரிவிக்கவில்லை. எது எப்படி இருப்பினும் நான் இரசாயன உரங்களுக்கு எதிரானவன். கோட்டாபய ராஜபக்ஷவின் செயற்பாடு தவறானது. அவரது செயற்பாட்டுக்கு நான் அன்றும் இன்றும் எதிராகவே உள்ளேன் என்று தெரிவித்தார்.

இறுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவர்களுக்கு இடையேயான மோதலை நிறுத்தினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# இலங்கையின் சுதந்திரதின நாள் தமிழர்களின் வாழ்வில் கரிநாள்!

## சுமந்திரன் எம்.பி. கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜன. 30

ஜனநாயகம் என்ற போர்வையிலே பேரினவாத ஆட்சி காரணமாகவே சுதந்திரம் கிடைத்தும் 75 ஆண்டுகளாக தமிழர்களுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சிங்கள மக்களுக்கு அரசியல் சுதந்திரம் இருந்தாலும் இன்றைய சூழ்நிலையை பார்க்கின்றபோது சிங்கள மக்களுக்கும் சுதந்திரம் கிடைக்கவில்லை என்பது தெட்டத்தெளிவாகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடு கடனாளியாக இருக்கின்றது நிலையில் 75வது சுதந்திர தினத்தை ஜனாதிபதி கொண்டாட விரும்புவதை அடியோடு நிராகரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் அனைவரும் சுதந்திர தின கொண்டாட்டத்தை புறக்கணிக்கவேண்டும் என்றும் பெப்ரவரி 04 ஆம் திகதி மட்டக்களப்பில் கறுப்புக் கொடிப் போராட்டத்தை நடத்த இருப்பதாகவும் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டார்.

சுதந்திர தின நாள் தமிழர்களின் வாழ்வில் கரிநாள் என்ற தொனிப்பொருளில் பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கை தமிழரசு கட்சி, போராட்டத்தை நடத்தும் எனவும் அவர் கூறினார். (அ)

# 2020 இல் வழங்கிய வரிச்சலுகையே பொருளாதார நெருக்கடிக்கு காரணம்

## ஜனாதிபதி ரணில் கூறுகின்றார்



கொழும்பு, ஜன. 30

2020ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வரிச்சலுகையே நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக அமைந்தது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தற்போது முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களை சீர்குலைப்பதால் நாடு கடந்த மே மற்றும் ஜூன் மாதம் போன்ற நெருக்கடிக்குள் சிக்குவதை தடுக்க முடியாது என அனுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2019ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 15 சதவீத மாக காணப்பட்டது.

எனினும், அதன்பின்னர் 2020 முதல் 2022ஆம் ஆண்டு வரையில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.4 சதவீதமாக குறைவடைந்தது.

இந்தநிலையில், குறித்த வருடங்களில் வழங்கப்பட்ட வரிச்சலுகை நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானது.

எனவே அந்நிய செலவணி இருப்பை அதிகரித்து பின்னர் வரிச்சலுகை தொடர்பில் சிந்திக்க முடியும். எதிர்வரும் வருடத்தில் நாம் பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து மீள முடியும்-என்றார். (அ)

# 2 குழுக்களுக்கு இடையே புல்மோட்டையில் மோதல்!

## இருவர் பலி! 4 பேர் காயம்!!

திருமலை, ஜன. 30

திருகோணமலை - புல்மோட்டை பகுதியில் இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், இந்த சம்பவத்தில் காயமடைந்த 4 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

புல்மோட்டை பகுதியில் விவசாயக் காணி எல்லை பிரச்னை காரணமாக இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதம், பின்னர் கைகலப்பாக மாறியுள்ளது. சம்பவத்தில் புல்மோட்டை பகுதியைச் சேர்ந்த 42வயதான இருவர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, இந்த சம்பவத்தில் பலத்த காயமடைந்த 4 பேர் புல்மோட்டை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர் என வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளை புல்மோட்டை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# உரங்கள் கொள்வனவு செய்வதற்கு 16,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

கொழும்பு, ஜன. 30

பெரும்போகத்திற்காக உரங்களை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் 16,000 மில்லியன் ரூபாயை ஒதுக்கியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளபோதிலும், உரங்களை கொள்வனவு செய்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பூரண ஆதரவை வழங்கியுள்ளதாக அவர் கூறினார்.

விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தியாளர்களின் பிரச்சினைகள் குறித்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். உரங்களை விநியோகிப்பதற்காக தீவின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக மாவட்டக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# காற்று மாசு அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 30

கம்பஹா, யாழ்ப்பாணம், அம்பலாந்தோட்டை மற்றும் நீர்கொழும்பு ஆகிய நகரங்களில் காற்றின் தரம் நேற்று ஆரோக்கியமற்ற நிலையில் பதிவாகியுள்ளது.

பிற்பகல் 3.26 மணிக்கு பதிவான காற்று தரச்சுட்டெண்ணுக்கு அமைய, கம்பஹாவில் 169 ஆகவும், யாழ்ப்பாணத்தில் 162 ஆகவும், அம்பலாந்தோட்டையில் 158 ஆகவும், நீர்கொழும்பில் 154 ஆகவும் பதிவாகியுள்ளது.

அவ்வாறே, கொழும்பு, பத்தரமுல்லை, நுவரெலியா மற்றும் கண்டி ஆகிய நகரங்களின் காற்றின் தரம், சுவாச கோளாறு கொண்ட குழுவினருக்கு ஆரோக்கியமற்ற நிலையில் பதிவாகியுள்ளது. (அ)

# போதைப்பொருளுடன் 489 சந்தேக நபர்கள் கைது

கொழும்பு, ஜன. 30

விசேட அதிரடிப் படை, பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பில் 489 சந்தேக நபர்கள் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களின் 05 மணிநேர கூட்டு நடவடிக்கையின் போதே 489 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது 01 கிலோ ஹெரோயின் மற்றும் 01 கிலோ கஞ்சா உட்பட போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (அ)

# பாராளுமன்றத்தை நேற்று படம்பிடித்த இருவர் கைது!

கொழும்பு, ஜன. 30

சந்தேகத்திற்கு இடமான முறையில், பாராளுமன்ற வளாகத்தை கையடக்கத் தொலைபேசி மூலம் படமெடுத்த இருவரை நேற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்கள் இருவரும் பாராளுமன்ற மைதானத்தில் இருந்து பாராளுமன்றத்துக்கு நுழையும் பாதை வழியாக உள்ள தியவன்னா ஓயாவுக்கு அருகில் நின்று பாராளுமன்ற வளாகத்தை படமெடுத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் பாராளுமன்றத்தை படமெடுத்தமைக்கான நோக்கத்தை சந்தேகநபர்கள் இதுவரை வெளியிடாத நிலையில் தலங்கம பொலிஸார் அவர்களிடமிருந்து வாக்குமூலம் பெற்றுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.00 மணி : இயற்கை வழி
7.15 மணி : கதைவழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.00 மணி : தொடர் நாடகம்
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்- மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : சாட்சியம் (மறு ஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : சினிமா சினிமா
6.00 மணி : இவினிங் பிளாஸ்ரர்
6.30 மணி : குறுந்திரை

**இரவு**

7.00 மணி : நலந்தானா



7.30 மணி: வழிப்போக்கன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு